தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

விலை: ரூ. 20
ஆகஸ்ட், 2025

மலர்: 27
இதழ் : 04

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

முற்றம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்



50 ரூபாய் சேமிப்பு 13 லட்சமான கதை

நம்மோடு களத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர்

ரேபிஸ் நோய்: பயம் வேண்டாம்! பாதுகாப்பு வேண்டும்!

TNULM

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

Tamilnadu Urban Livelihoods Mission

TNULM

"தெருவோர வியாபாரியாய் இருந்த எங்களுக்கு ஒரு காலத்துல பேங்க் போய் லோன் கேட்டா தரமாட்டாங்க.

இப்போ TNULM திட்டத்தின் மூலமா, எங்களையும் மதிச்சு, பேங்க்ல கடன் தந்தாங்க.

இது எங்களுக்கான அங்கீகாரத்தையும், அடையாளத்தையும் குடுத்து இருக்கு."

"தொடர்ந்து செல்லுங்கள் உங்களுக்கு தேவையான அனைத்தும் சரியான நேரத்தில் உங்களிடம் வரும்"

"எங்க வாழ்க்கை தென்னை ஓலையோட பின்னி பிணைஞ்சு இருக்கு.

எங்க குடும்ப ஆண்கள் அவங்க பெயருல தோப்ப குத்தகைக்கு எடுத்த காலம்மாறி, குழு மூலமா வங்கி கடன் வாங்கி, எங்க பேர்லையே குத்தகைக்கு எடுக்கிறோம். எங்கள் வாழ்க்கையை மாற்றிய TNULM-க்கு நன்றி."

"தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும் ஒருவரை வெற்றி பெற வழி வகுக்கும்"

உதயநிதி ஸ்டாலின்
தமிழ்நாடு துணை முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

அன்புச் சகோதரிகளுக்கு வணக்கம்!

'முற்றம்' மாத இதழின் வாயிலாக மீண்டும் உங்களுடன் என் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஆகஸ்ட் மாதம், நம் நாடு விடுதலை பெற்ற மாதம். இந்த சிறப்புக்குரிய மாதத்தில் மகளிரின் பொருளாதார விடுதலைக்காக உழைத்து வரும் அத்தனை சுய உதவிக் குழுக்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இதழில் பெண் ஆளுமைகளின் தொடரில் தர்மாம்பாள் அம்மையார் பற்றிய வாழ்க்கைச் சுருக்கம் வெளியாகி உள்ளது. சுமார் 135 ஆண்டுகளுக்கு முன் பிறந்த அவர் இச்சமூகத்திற்கு எவ்வளவு தொண்டு ஆற்றி உள்ளார் என்பதைக் கவனியுங்கள். அவரது வாழ்க்கை தரும் உற்சாகம் நம்மை இன்னும் வீரியமாக இயக்கச்செய்யும்.

பொதுவாக, நான் எந்த மாவட்டத்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டாலும், அந்த மாவட்டத்தில் உள்ள மகளிர் சுய உதவிக்குழு சகோதரிகளை தொடர்ந்து சந்தித்து வருகிறேன். அப்படியாக, சமீபத்தில் திருவண்ணாமலை மற்றும் கரூர் மாவட்டங்களின் பயணத்தில் நம் சகோதரிகளைச் சந்தித்து கலந்துரையாடினேன்.

"எங்க குடும்பத்துல ஒருத்தர் மாதிரி, எங்க கூட உட்கார்ந்து பேசி, எங்க குழு பத்தியும் எங்கள பத்தியும் அக்கறையோட விசாரிச்சது ரொம்ப மகிழ்ச்சியா இருக்குங்க" என்று திருவண்ணாமலை மாவட்டம் சு.ஆண்டாப்பட்டு ஊராட்சியைச் சேர்ந்த சுய உதவிக் குழு சகோதரி ஒருவர் நெகிழ்ந்தார்.

'மாதிரி' எல்லாம் இல்லை. தமிழ்நாட்டில் இயங்கும் சுயஉதவிக் குழுக்கள் அனைத்துமே நிச்சயமாக ஒரே குடும்பம்தான். இது முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் உருவாக்கிய குடும்பம். அதனை மேலும் மேலும் வளர்த்தெடுக்கும் பணியைத்தான் நம்முடைய திராவிட மாடல் அரசு சிறப்பாகச் செய்து வருகிறது. நமது முதலமைச்சர் அவர்களும் இதில் தனி கவனம் செலுத்துகிறார்கள். அதனால் தான், எத்தனையோ துறைகள் இருந்தாலும், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான துறைக்கு என்னை அமைச்சராக்கி, உங்களுடைய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் வாய்ப்பை நமது முதலமைச்சர் அவர்கள் எனக்கு தந்துள்ளார்கள்.

இச்சமூகம் எப்போதும் பொருளாதாரத்தில் இருந்து பெண்களை விலக்கியே வைத்திருந்தது. தங்களுடைய செலவிற்காகக் கூட ஆண்களை எதிர்பார்த்து நிற்கும் அவலத்திற்கு ஆளாக்கப்பட்டிருந்தவர்களை, இன்றைக்கு பொருளாதாரத்தில் முக்கியப் பங்கெடுப்பாளர்களாக மாற்றி உள்ளன 'சுய உதவிக் குழுக்கள்'. "வட்டிக் கடனுக்கு இன்னொருத்தர் வீட்டில் போய் நிற்க வேண்டிய நிலையில் இருந்து எங்களை மீட்டது இந்த குழுக்கள் தான்" என்று ஒரு சகோதரி கூறிய கருத்து எனது சிந்தனையில் இன்னும் ஓடிக் கொண்டிருக்கிறது.

இன்னும் நிறைய மகளிர் சுயஉதவிக் குழுக்களை உருவாக்க வேண்டும். அவற்றில், ஏராளமான சகோதரிகளை இணைக்க வேண்டும் என்னும் உத்வேகத்தை அது ஏற்படுத்தி உள்ளது. இதேபோல், கரூர் மாவட்டப் பயணத்தின் போது, சந்தித்த மகளிர் சுயஉதவிக் குழு சகோதரிகள், மகளிர் முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணம், புதுமைப் பெண், பள்ளிகளில் காலைச் சிற்றுண்டி வழங்கும் திட்டம் உள்ளிட்ட அனைத்து திட்டங்களைப் பற்றியும், இந்தத் திட்டங்கள் எல்லாம் அவர்களுக்கு எந்தெந்த வகைகளில் பயனுள்ளதாக இருக்கிறது என்பதைப் பற்றியும் ஆர்வத்துடன் எடுத்துச் சொன்னார்கள்.

" மதிக்கப்படாமல் இருந்த எங்கள் வாழ்க்கையை உயர்த்திக் காட்டி, சமூகத்தில் மதிப்பைக் கொடுத்தது சுய உதவிக்குழுதான்" என்றும் "பொறுப்பற்ற கணவன் – குழந்தைகளையும் குடும்பத்தையும் பராமரிக்க வேண்டிய சூழலில் சுயஉதவிக் குழு தான் எனக்கு பக்கபலமாக உள்ளது" என்றும் "குழு தான் எனக்கு தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் கொடுத்தது" – என்றெல்லாம் நம் சகோதரிகள் கூறிய கருத்துக்கள் இச்சமூகத்தில் பெண்களின் 'சுயமரியாதை'க்கு சுயஉதவிக் குழுக்கள் எவ்வளவு பங்காற்றுகின்றன என்பதை அழுத்தமாக உணர்த்துகிறன.

அரசுத் திட்டங்கள் குறித்தும், மகளிர் சுயஉதவிக் குழுக்களின் செயல்பாடுகள் குறித்தும் சகோதரிகளுக்கு இருக்கும் விழிப்புணர்வு எனக்கு பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. விழிப்புற்றிருக்கும் பெண் சமூகம் ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தையும் வளர்ச்சிப் பாதையில் மென்மேலும் முன்னேற்றிச் செல்லும் என்பதில் சந்தேகமில்லை!

அன்புடன்,

இன்னுயிர் காப்போம்... திட்டம்

சாலை விபத்தால் ஏற்படும் உயிரிழப்பைக் குறைத்திட, விபத்து ஏற்பட்ட முதல் 48 மணி நேரத்திற்குள் கட்டணமில்லா உயிர் காக்கும் அவசர சிகிச்சை

சாலை விபத்தில் உயிரிழப்பு என்பது தற்போதைய காலகட்டத்தில் அடிக்கடி நிகழும் ஒன்றாகிவிட்டது என்றாலும் கூட, இதனால் ஏற்படும் உயிர் இழப்பு என்பது மிகவும் வேதனை அளிக்கும் ஒன்றாகும். இந்த நிலையில்தான் சாலை விபத்துகளில் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில் ஒரு திட்டம் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டம் தான் "நம்மைக் காக்கும் 48 இன்னுயிர் காப்போம்" திட்டம் ஆகும்.

சாலை விபத்தில் சிக்கியவர்களை காப்பாற்றும் பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் இத்திட்டத்தினை 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முழுவதும் 640 மருத்துவ மனைகளில் இந்தத் திட்டத்தின் கீழ் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் படி விபத்தில் பாதிக்கப்பட்டவரை உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கும் நபருக்கு ஐந்தாயிரம் ரூபாய் ஊக்கத் தொகையும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் பாராட்டக்கூடிய செய்தி ஆகும். இதில் மற்றொரு சிறப்பு என்னவென்றால் விபத்தில் சிக்கியவர்கள் யாராக இருந்தாலும் (வெளிமாநிலத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும்) இந்தத் திட்டத்தின் கீழ் சிகிச்சை அளிக்கப்படும்.

இந்தத் திட்டம் எவ்வாறு செயல்படுகிறது?

இத்திட்டத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட அரசு மருத்துவமனைகள், தனியார் மருத்துவமனைகள் உரிய தகுதியின் அடிப்படையில் இணைக்கப்பட்டு, மருத்துவச் சிகிச்சைகள் வழங்கப்படும். மேலும் இத்திட்டத்தின் மூலம் முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டு அட்டை உடையவர்கள், இல்லாதவர்கள், பிற மாநிலத்தவர், வெளிநாட்டவர் என அனைவருக்கும் வருமான வரம்பு ஏதும் கணக்கில் கொள்ளாமல், தமிழ்நாட்டின் எல்லைக்குள் ஏற்படும் சாலை விபத்துகளில் காயமடைவோர்களுக்கு முதல் 48 மணி நேரம் வரை கட்டணமின்றி மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 81 மருத்துவச் சிகிச்சை முறைகளுக்கு, நபர் ஒருவருக்கு இரண்டு லட்ச ரூபாய் வரை செலவினத்தில் சிகிச்சை வழங்கப்படுகிறது.

பயன்கள்

இத்திட்டத்தில், சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்படும் மருத்துவமனையிலேயே முதல் 48 மணி நேரம் வரை அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சை அளிக்கப்படும். அந்த 48 மணி நேரத்திற்கு மேலும் சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர் நிலையற்றவராக இருந்தால் அல்லது தொடர் சிகிச்சை தேவைப்பட்டால், கீழ்க்கண்ட வழிகாட்டுதல் களின்படி சிகிச்சைகள் வழங்கப்படும்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டப் பயனாளியாக இருந்தால், நோயாளி சிகிச்சை காப்பீட்டுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்தால், அந்த மருத்துவமனையிலேயே மேலும் சிகிச்சை தொடரலாம். முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட பயனாளியாக இல்லாமல் இருந்தால், நோயாளி மேற்கொள்ளும் சிகிச்சை காப்பீட்டுத் திட்டத்தில் இல்லை என்றால், நோயாளியை நிலைப்படுத்தி அரசு மருத்துவமனைக்கு மாற்றி சிகிச்சையைக் கட்டணமில்லாமல் தொடரலாம்.

சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர் அரசு மருத்துவமனைக்குச் செல்லத் தயாராக இல்லை என்றாலோ (அல்லது) தனியார் காப்பீட்டிலோ (அல்லது) பணம் செலுத்தியோ சிகிச்சையைப் பெற விரும்பினால், அதே மருத்துவமனையிலோ அல்லது அவர் தேர்ந்தெடுக்கும் பிற மருத்துவமனையிலோ சிகிச்சைக்கான கட்டணத் தொகையை செலுத்தி சிகிச்சையைத் தொடரலாம்.

இன்னுயிர் காப்போம் -நம்மைக் காக்கும் 48 திட்டத்தில், அங்கீகரிக்கப்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் பற்றிய விவரங்கள், மாவட்ட வாரியாக பட்டியலிடப்பட்டு பொதுமக்கள் அனைவரும் அறியும் வகையில் வலைத்தளங்களில் (https://cmchistn.com) வெளியிடப்பட்டுள்ளன. இத்திட்டம் குறித்து மேலும் விவரங்கள் அறிய கட்டணமில்லா தொலைபேசி எண் 104-ஐ தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்னுயிர் காப்போம் -நம்மைக் காக்கும் 48 திட்டம்

அங்கீகரிக்கப்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் பற்றிய விவரங்கள், மாவட்ட வாரியாக பட்டியலிடப்பட்டு பொதுமக்கள் அனைவரும் அறியும் வகையில் வலைத்தளங்களில் (https://cmchistn.com) வெளியிடப்பட்டுள்ளன. மேலும் விவரங்கள் அறிய 104-ஐ தொடர்பு கொள்ளலாம்.

சாலை விபத்தில் உயிரிழப்புகளை குறைக்கும் நோக்கத்தில் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் ஓர் உன்னதமான திட்டம் இந்த இன்னுயிர் காப்போம் திட்டம். இந்தத் திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவரை மருத்துவமனையில் அனுமதிப்பவர்களுக்கும் ஒரு நன்மை கிடைக்கிறது. இதனால் அவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

சாலை விபத்தினால் ஏற்படும் உயிரிழப்புகள் தமிழ்நாட்டில் குறைந்து கொண்டே வரும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இந்த உன்னதமான திட்டம் குறித்து தெரியாதவர்களுக்கும், அறியாதவர்களுக்கும் நம்மால் முடிந்தவரை எடுத்துக்கூறி நாமும் இன்னுயிரைக் காப்போம்!

-புவனேஸ்வரி தீபன்

பெண்ணுரிமைப் போராளி தர்மாம்பாள்

வரலாற்றில் என்றுமே பெண்களுக்கான பக்கங்கள் குறைத்தே ஒதுக்கப்பட்டுள்ளன. மறைக்கப்பட்ட (அ) முழுமையாக சொல்லப்படாத பலரின் வரலாற்றை உரக்கச் சொல்வோம்!

தமிழ்நாட்டின் முன்னேற்றத்தில் பெண்களுக்கு பெரிய பங்களிப்பு உண்டு. இங்கு பலரும் தங்களை பொது வாழ்வில் ஈடுபடுத்திக் கொண்டு, மக்கள் நலனுக்காகப் போராடியிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர்தான் மருத்துவர் சா. தர்மாம்பாள். இவர் கைம்பெண் மறுமணம், கலப்பு மணம், பெண் கல்வி என பெண்ணுரிமைக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக்கொண்டவர்.

தொடக்கம்

தஞ்சாவூர் அருகே கருந்தட்டாங்குடி எனும் கிராமத்தில் 1890ஆம் ஆண்டு தர்மாம்பாள் பிறந்தார். இவரது தந்தை சாமிநாதன், தாய் பாப்பம்மாள். இவருக்கு அவரது பெற்றோர் வைத்த பெயர் சரஸ்வதி. பின்னாட்களில் அவர் பெயர் தர்மாம்பாள் என்றழைக்கப்பட்டார்.

இளம் வயதிலேயே, தர்மாம்பாள் தன் பெற்றோரை இழந்துவிட்டார். இவரை இலக்குமி என்பவர்தான் வளர்த்து வந்தார். தர்மாம்பாள் சிறுவயது முதலே கலைகளில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். குறிப்பாக நாடகக் கலை மீது மிகுந்த பற்று கொண்டிருந்தார். அக்காலத்தில் நாடகங்களில் நடித்துப் புகழ்பெற்ற நடிகராக விளங்கியவர் குடியேற்றம் முனிசாமி. அவரையே சாதி மறுப்புத் திருமணம் புரிந்து கொண்டனர். திருமணத்திற்குப் பின்னர் சிறிதுகாலம் நாகப்பட்டினத்தில் தன் காதல் கணவருடன் வாழ்ந்தார். பின்னர் சென்னைக்குக் குடிபெயர்ந்தார்.

சித்த மருத்துவர்

கல்வி மீது தர்மாம்பாளுக்கு இருந்த ஆர்வம் அவரை சித்த மருத்துவராக்கியது. அன்றைய காலகட்டத்தில் சென்னையில் புகழ்பெற்று விளங்கிய மருத்துவர்களில் இவரும் ஒருவர். தர்மாம்பாள் எளிய மக்களின் மருத்துவராக விளங்கினார். பணம் ஈட்டுவதற்கான தொழிலாக மருத்துவத்தைக் கருதாமல், ஏழை எளியவர்களுக்கு மருத்துவ சேவை செய்ததே அவரை மக்களிடம் கொண்டு சேர்த்தது. சென்னை, 330 தங்கச்சாலை என்ற முகவரியில்தான் தர்மாம்பாள் தனது சித்தானந்தா சித்த வைத்திய சாலையை நடத்தி வந்தார். இங்குதான் அவர் வாழ்க்கையில் பல்வேறு திருப்புமுனைகள்



அமைந்தன. மருத்துவத்துக்கு வரும் மக்களில் பலர் தங்கள் வாழ்க்கைத் துயரையும் அவரிடம் பகிர்ந்து, ஆலோசனை பெற்று பயனடைவார்கள்.

பெண் கல்வி

பெண்கள் அடிமைகளாக நடத்தப்படுவதை விரும்பாத தர்மாம்பாள், பெண் கல்வியின் அவசியத்தை எடுத்துரைத்ததோடு, பல பெண்கள் கல்வி கற்கவும் வழிகாட்டியாக திகழ்ந்தார்.

தமிழ் மாதர் கழகத்தைத் தோற்றுவித்து பெண்கள் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டார். தமிழ் மாதர் கழகத்தின் தலைவராக, பண்டிதர் நாராயணி அம்மையாரும், செயலாளராக தர்மாம்பாளும் பொறுப் பேற்று, பெண்களின் கல்வி வளர்ச்சிக்கு உழைத்தனர். பெண்களிடையே நிலவிய மூடப்பழக்கங்களை எடுத்துக்கூறி, பகுத் தறிவுச் சிந்தனையை விதைத்தனர்.

தர்மாம்பாள் பல கைம்பெண்களுக்கு மறுமணம் செய்து வைத்தார்; சாதி ஒழிப்பைக் கருத்தில் கொண்டு கலப்புத் திருமணம் செய்வித்தார். இதனால் சமூகப் போராளியாக உருவெடுத்தார்.

> “
>
> **தர்மாம்பாள் பல கைம்பெண்களுக்கு மறுமணம் செய்து வைத்தார்.**
>
> **1951 ஆம் ஆண்டு அவருக்கு வீரத்தமிழன்னை என்ற பட்டம் வழங்கப்பட்டது.**
>
> **பெண்களை கோயிலுக்குச் சேவை செய்ய அர்ப்பணிக்கும் பெண்ணடிமைத்தனமான தேவதாசி முறை ஒழிக்கப்பட்டதிலும் இவரது பங்களிப்பு உண்டு.**
>
> ”

தேவதாசி ஒழிப்பு

பெண்களை கோயிலுக்குச் சேவை செய்ய அர்ப்பணிக்கும் பெண்ணடிமைத்தனமான தேவதாசி முறை ஒழிக்கப்பட்டதிலும் இவரது பங்களிப்பு உண்டு.

சட்டமன்றத்துக்குள்ளே மருத்துவர் முத்துலட்சுமி தேவதாசி முறையை எதிர்த்துப் போராடிய போது, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், திருவிக, பெரியார் ஆகியவர்களுடன் தர்மாம்பாள் களத்தில் இணைந்து போராடினார். தர்மாம்பாளின் மக்கள் செல்வாக்கை பலரும் அறிந்தது இந்தப் போராட்டத்தில்தான். முத்துலட்சுமி அம்மையாரின் தேவதாசி ஒழிப்பு மசோதாவிற்கு ஆதரவு தேடி வீடுவீடாக ஏறி இறங்கி, இம்முறையை ஒழிக்க பாடுபட்டார்.

பெரியாராக்கியவர்களில் ஒருவர்

தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு 1938ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்றது. இம்மாநாடு திராவிட இயக்க வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற மாநாடாகும். அன்னை தர்மாம்பாள், மலர்முகத்தம்மையார், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் ஆகியோர் மாநாட்டு அமைப்பாளர்கள். மாநாட்டு அலுவலகம் அன்னை தர்மாம்பாள் இல்லத்தில் செயல்பட்டது.

மாநாட்டில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில், திராவிடர் கழகத்தலைவர் ஈ.வெ. ராமசாமி அவர்கள் பெயரைச் சொல்லிலும் எழுத்திலும் வழங்கும் போது, இனி "பெரியார்" என்றே வழங்க வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியதில் பெரும் பங்காற்றியவர்களில், மாநாட்டின் அமைப்பாளராக இருந்த அன்னை தர்மாம்பாளும் ஒருவர்.

இந்தி எதிர்ப்பும் தமிழ்ப்பற்றும்

1938ஆம் ஆண்டு பள்ளிகளில் இந்தி மொழி கற்பது கட்டாயம் என அன்றைய முதலமைச்சர் ராஜாஜி அரசு ஆணை பிறப்பித்தது. இந்த ஆணையை எதிர்த்துத் தந்தை பெரியார் போராட்டம் நடத்தினார்.

அன்னை தர்மாம்பாள் தலைமையில் பெண்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் களமிறங்கினர். 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட பெண்கள் கலந்துக்கொண்ட இப்போராட்டத்தில் தர்மாம்பாள் உள்பட பலரும் கைது செய்யப்பட்டனர். மொழி உரிமை காத்திட முன்னின்று போராடிய தர்மாம்பாள், தமிழ் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியுள்ளார்.

சொந்த ஊரில் இருந்த தனது வீட்டை கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். தமிழ்நாட்டு பள்ளி மாணவர்களின் தமிழறிவை வளர்க்க சென்னை மாணவர் மன்றம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. அந்த அமைப்பின் தலைவராகப் பத்தாண்டுகள் பணியாற்றினார். பெரியளவில் நிதி திரட்டி இந்த அமைப்புக்கு சொந்தக் கட்டடம் ஒன்றை உருவாக்கினார். இப்படி தமிழுக்கும், தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சிக்கும் அவர் ஆற்றிய பங்களிப்பு ஏராளம். அதை அங்கீகரிக்கும் வகையில், 1951ஆம் ஆண்டு அவருக்கு வீரத்தமிழன்னை என்ற பட்டம் வழங்கப்பட்டது. 1959ஆம் ஆண்டு தர்மாம்பாள் காலமானார்.

–பாண்டியன்

நம்மோடு களத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர்

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், பெண்கள் பொருளாதார சுதந்திரம் காண வேண்டும் என்ற தொலைநோக்கு பார்வையுடன் 1989 ஆம் ஆண்டு மகளிர் சுய உதவிக்குழுக்களை ஆரம்பித்தார்.

அதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், உள்ளாட்சித் துறையின் அமைச்சராக, துணை முதலமைச்சராக இருந்தபோது மாவட்டந்தோறும் சென்று லட்சக்கணக்கான மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கணக்குத் தொடங்கி வைத்து, பொருளாதார கடன், சுழல் நிதி கடன் உள்ளிட்டவற்றை வழங்கி பெண்கள், வங்கிகளுக்கு தன்னம்பிக்கையுடன் சென்று தாங்களே வங்கிப்பணிகளை மேற்கொள்ளும் நிலைக்கு உயர்த்தினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான 'திராவிட மாடல்' அரசு அமைந்தது முதல் தற்போது வரை தமிழ்நாடு முழுவதும் 1 லட்சத்து 49 ஆயிரத்து 767 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக தற்போது தமிழ்நாட்டில் 53 லட்சத்து 74 ஆயிரம் உறுப்பினர்களுடன் 4 லட்சத்து 76 ஆயிரம் மகளிர் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 19 லட்சத்து 12 ஆயிரத்து 927 குழுக்களைச் சேர்ந்த 2 கோடியே 48 லட்சத்து 68 ஆயிரத்து 51 உறுப்பினர்களுக்கு 1 லட்சத்து 20 ஆயிரத்து 240 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்புகள் வழங்கி தமிழ்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஒரு முக்கிய அங்கமாக செயல்பட்டு வருகின்றன.

கரூர் மாவட்டத்தில் கடந்த நான்காண்டுகளில் 41 ஆயிரத்து 275 மகளிரைக் கொண்டு, 3 ஆயிரத்து 175 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 32 ஆயிரத்து 941 குழுக்களைச் சேர்ந்த 3 லட்சத்து 95 ஆயிரத்து 292 உறுப்பினர்களுக்கு 1 ஆயிரத்து 777.34 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

கரூர் மாநகராட்சி திருநகர் பகுதியில் 12 மகளிர் உறுப்பினர்களைக் கொண்டு 10.12.2021 முதல் தளிர் மகளிர் சுய உதவிக்குழுவினர் செயல்பட்டு வருகின்றார்கள். இவர்களுக்கு கரூர் நகர கூட்டுறவு வங்கியில் வங்கிக்கடன் இணைப்பு பெற்று தந்து, சுய உதவிக்குழு உறுப்பினர் பயிற்சி, ஊக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சி, பேப்பர் பை தயாரிக்கும் பயிற்சி, தொழில் முனைவோர் பயிற்சி ஆகிய பயிற்சிகளும் மகளிர் திட்டம் மூலம் அளிக்கப்பட்டுள்ளன.

மேலும் இக்குழுவின் உறுப்பினர்கள் பேப்பர் பை தயாரித்தல் மட்டுமல்லாது, குழுவிற்குள் வழங்கப்படும்

இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி. செ. ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. இரா. மாணிக்கம், திரு. ஆர். இளங்கோ, திருமதி. க. சிவகாமசுந்தரி, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் செயலாளர் மருத்துவர் ச.உமா, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர் திரு. மீ.தங்கவேல், இ.ஆ.ப., மேயர் திருமதி. க. கவிதா உள்பட உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

உள்கடன் தொகையைக் கொண்டு உணவகம் நடத்துதல், டெக்ஸ்டைல் வணிகம், மருந்தகம், தையல் பணி ஆகிய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 9.7.2025 அன்று, கரூர் மாநகராட்சி திருநகர் பகுதியில் செயல்பட்டு வரும் தளிர் மகளிர் சுய உதவிக்குழுவின் பேப்பர் பை தயாரிக்கும் கூடத்தில் பேப்பர் பை தயாரிக்கும் இயந்திர செயல்பாடு, தயாரிக்கப்பட்டுள்ள பல்வேறு வகையான பேப்பர் பைகளை பார்வையிட்டு, தயாரிக்கும் நடைமுறைகள் குறித்து கேட்டறிந்தார்.

தளிர் மகளிர் சுய உதவிக் குழுவின் வங்கி வரவு, செலவு, கடன் பெறுதல், திரும்ப செலுத்துதல், உறுப்பினர்களுக்கு உள்கடன் அளித்தல் உள்ளிட்ட குழுவின் செயல்பாடுகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடினார்.

அப்போது பேசிய குழு உறுப்பினர் தாஹிரா பானு, "மகளிர் சுய உதவிக்குழு மூலம் இன்று நான் 10 பேருக்கு வேலைதரும் நிலைக்கு உயர்ந்திருக்கிறேன். என் மகளுக்கு விருப்பமான கல்வியைப் பெற்றுதரும் பொருளாதார சுதந்திரம் கிடைத்திருக்கிறது" என்றார்.

"கரூர் மாவட்டத்தில் கடந்த நான்காண்டுகளில் 41 ஆயிரத்து 275 மகளிரைக் கொண்டு, 3 ஆயிரத்து 175 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன."

அவரைத் தொடந்து பேசிய சித்ரா, மகளிர் சுய உதவிக்குழு மூலம் இன்று தன் ஒட்டுமொத்த குடும்பத்தையும் கவனித்துக்கொள்ளும் பொருளாதார நிலையை அடைந்திருப்பதாக கூறினார்.

மேலும் தங்களின் தனித்திறனைக் காட்டும் வண்ணமாக அபிராமி, நம் திராவிட மாடல் அரசின் திட்டங்களையெல்லாம் தொகுத்துக் கைப்பட எழுதிவந்த கவிதையை வாசித்துக் காண்பித்தார்.

இறுதியாக மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தளிர் சுய உதவிக் குழுவிற்கு வாழ்த்துகளை தெரிவித்து, அவர்களுடனான இந்தச் சந்திப்பு என்றென்றும் அவர் நினைவில் நிற்கும் என்று கூறி விடைபெற்றார்.

சுய உதவிக் குழுக்களோடு திராவிட மாடல் நாயகர்கள்

தேனி

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 16.6.2025 அன்று தேனி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 851 பயனாளிகளுக்கு மொத்தம் 13.49 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

மேலும் 71 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 8.02 கோடி ரூபாய்க்கான வங்கிக் கடன் இணைப்புகளையும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.இ.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தங்க தமிழ்ச் செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.என்.இராமகிருஷ்ணன், திரு.ஆ.மகாராஜன், திரு. கே.எஸ்.சரவணக்குமார், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., கூடுதல் செயலாளர் திருமதி ஆர். வி.ஷஜீவனா, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ரஞ்ஜீத்சிங்,இ.ஆ.ப., உள்பட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 17.06.2025 அன்று சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாக மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், தமிழ்நாடு ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் 57 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு, 5.07 கோடி ரூபாய்க்கான வங்கிக் கடன் இணைப்புகள் உட்பட ஆயிரத்து ஐந்நூற்று பன்னிரண்டு பயனாளிகளுக்கு ரூபாய் 24.24 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியின் முன்னதாக, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாக மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களின் கண்காட்சியினைப் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார், திரு.எஸ்.மாங்குடி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி, ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி கா.வானதி, சார் ஆட்சியர் திரு.ஆயுஷ் வெங்கட் வட்ஸ், இ.ஆ.ப., உள்பட அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

திருப்பத்தூர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், 26.6.2025 அன்று திருப்பத்தூர் மாவட்டம், மண்டலவாடியில் நடைபெற்ற அரசு விழாவில், 174 கோடியே 39 லட்சம் ரூபாய் செலவில் 90 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 68 கோடியே 76 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 60 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 18 ஆயிரம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் உட்பட பல்வேறு துறைகளைச் சார்ந்த 1 லட்சத்து 168 பயனாளிகளுக்கு 273 கோடியே 83 லட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த விழாவில், மாண்புமிகு நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் திரு.டி.எம்.கதிர்ஆனந்த், திரு. சி.என். அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.க.தேவராஜி, திரு.ஏ.நல்லதம்பி, திரு.அ.செ.வில்வநாதன், திருமதி. அமுலுவிஜயன், பொதுப்பணித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி க. சிவசௌந்திரவல்லி, இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 13.07.2025 அன்று திருவண்ணாமலை மாவட்டம் சு.ஆண்டாப்பட்டு ஊராட்சியில், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் செயல்பட்டு வரும் சு.ஆண்டாப்பட்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்களுடன் குழுவின் செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடினார். அப்போது இவ்வூராட்சியில் குழு உறுப்பினர்கள் கரும்பு விவசாயம், பூந்தோட்டம், காய்கறி சாகுபடி உள்ளிட்ட விவசாயம் சார்ந்த தொழில்களும், கறவை மாடு, ஆடு வளர்ப்பு, தையல், துணி வியாபாரம் செய்தல் உள்ளிட்ட பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக தெரிவித்தார்கள்.

இந்த கலந்துரையாடல் கூட்டத்தில் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் ச.உமா, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.க.தர்ப்பகராஜ், இ.ஆ.ப., மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

எளியோரை வலியோர் ஆக்கும் திட்டம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கையருக்கு தனிநபர் கடனுதவி

மாற்றுத் திறனாளிகள், முதியவர்கள், நலிவடைந்த பழங்குடியினர் (PVTG), திருநங்கைகளை (மூன்றாம் பாலினத்தவர்) கொண்டு சிறப்பு சுய உதவிக் குழுக்களை அமைப்பதன் வாயிலாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் அவர்களின் வறுமை மற்றும் பாதிப்புகளைக் குறைத்து, வாழ்வாதாரம் மேம்படுவதற்கான முறையான முயற்சிகளை எடுத்து வருகிறது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் சிறப்பு சுய உதவிக் குழுக்களில் உள்ள மாற்றுத் திறனாளிகள் (ஆண்/பெண்) தனிநபர் மற்றும் திருநங்கைகளின் (மூன்றாம் பாலினத்தவர்) வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், அவர்களை தொழில் முனைவோராக ஊக்குவித்திடவும், தனி நபர் ஒருவருக்கு ரூ. 40 ஆயிரம் வீதம் ஆறாயிரம் நபர்களுக்கு கடனுதவி வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் பயன் பெறுவதற்கான தகுதிகள்:

மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவரது பெற்றோர்/கணவர்/மனைவி ஆகியோர் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினராக இருக்க வேண்டும்.

திருநங்கையர்கள் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இருந்தாலும் அல்லது இல்லாமல் இருந்தாலும் தொழில் செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒவ்வொருவருக்கும் இக்கடனுதவி வழங்கப்படும்

- 18 வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.
- ஊரகப் பகுதியில் வசிப்பவராக இருக்க வேண்டும்

தனி நபர் ஒருவருக்கு ரூ. 40 ஆயிரம் வீதம் ஆறாயிரம் நபர்களுக்கு கடனுதவி வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

திட்டத்தில் சேர்வது எப்படி?

அணுக வேண்டிய முகவரி :

- ✓ தொடர்புடைய ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்
- ✓ அனைத்து மாவட்டங்களில் செயல்படும் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள்
- ✓ தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
- ✓ தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார அழைப்பு மைய தொடர்பு எண்: 155 330

- நிரந்தர முகவரி இருக்க வேண்டும்
- வங்கிக் கணக்கு தனி நபர் பெயரில் தொடங்கி இருக்க வேண்டும்
- மாற்றுத் திறனாளி எனில் UDID அடையாள அட்டை அல்லது மற்ற அடையாள அட்டை பெற்றிருக்க வேண்டும்.
- திருநங்கையர்கள் எனில் சமூக நலத்துறையால் வழங்கப்படும் அடையாள அட்டைவேண்டும்.

திட்டத்தின் சிறப்பம்சங்கள் :

உணவு பதப்படுத்தும் தொழில்கள், பண்ணை சாரா தொழில்கள், உற்பத்தி, சேவை மற்றும் வியாபாரம் சார்ந்த தொழில்களுக்கு, பிணையம் எதுவும் இன்றி ரூ. 40 ஆயிரம் வரை கடன் வழங்கப்படுகிறது.

கடன் தொகையினை உரிய காலத்தில் திரும்பச் செலுத்தினால் மீண்டும் வங்கிக் கடனுதவி பெற்றுத் தரப்படும்

வட்டி விகிதம்:

மாற்றுத் திறனாளி / திருநங்கையர்கள் பாதிக்கப்படக்கூடிய நபராகக் கருதப்படுவதால், 6% வட்டி விகிதத்தில் 12 முதல் 24 மாத தவணையில் திரும்பப் பெறும் கடனாக வழங்கப்படும்.

50 ரூபாய் சேமிப்பு 13 லட்சமான கதை

ஒவ்வொரு இதழிலும் புதுப்புது குழுக்களின் புதிய கதைகளையும் அனுபவங்களையும் கேட்கிறோம். இம்முறை உங்களிடம் பேச புதுமை மகளிர் வந்துள்ளனர்.

குழுவின் ஊக்குநர் தேவகி, தனது இ-சேவை மையத்தில் கணினியை இயக்கிக்கொண்டே, பேசத்தொடங்கினார். "என் ஊர் செங்கல்பட்டு மாவட்டம், செய்யாறு கிராமம். சின்ன வயசுலேயே திருமணம் செய்துட்டாங்க. கணவர் தேநீர் கடை வைத்திருந்தார். இருவரின் வீட்டிலும் வறுமை. இருவருக்குமே 'வாழ்வில் முன்னேற வேண்டும்' என்கிற எண்ணம் இருந்தது, ஆனால் வழிகள் ஏதும் தெரியவில்லை. எங்களுக்காக பணம் கொடுத்து உதவ யார் இருக்காங்க? என்று மனதை தேற்றிக் கொண்டு வாழத் தொடங்கியபோது தான் 2006ஆம் ஆண்டு இரண்டு சம்பவங்கள் நடந்தன.

ஒன்று, சுய உதவிக்குழுக்கள் பற்றி தெரிந்து கொண்டேன். பின்னர், 15 உறுப்பினர்களோடு 'புதுமை மகளிர்' சுய உதவிக்குழுவைத் தொடங்கினோம். எங்கள் ஊரின் முதல் சுய உதவிக்குழு இதுதான்.

இரண்டு, இந்தக் குழு உருவான சமயத்தில் அரசாங்கம் சுனாமி நிதிக் கடன் வழங்குவதாக அறிவிப்பை வெளியிட்டிருந்தது. 2004 ஆம் ஆண்டு வந்த ஆழிப்பேரலையால் எங்கள் பகுதியும் பாதிக்கப்பட்டதால், ரூ. 45 ஆயிரம் கடன் உதவி கிடைத்தது. அதுவே எனது தொழிலின் முதல் மூலதனம். நாங்கள் வாங்கிய முதல் வெளிக்கடன். என் கணவரின் தேநீர் கடையை, நோட்டு பேனா விற்கும் எழுதுபொருள் கடையாக மாற்றினேன். பிறகு தொழிலை விரிவாக்கம் செய்து, இந்த கணினி மையத்தை ஆரம்பித்தேன். இதற்கிடையில் பிகாம் படிப்பும் படித்தேன்.

ஆயிரமாக மாறிய ஐம்பது ரூபாய்!

"19 ஆண்டுகளுக்கு முன்பு, ஐம்பது ரூபாய் சேமிப்போடுத் தொடங்கினோம். இன்று, மாதம் ஆயிரம் ரூபாய் சேமிக்கிறோம். ஆரம்பத்தில் ரூ. 10 ஆயிரம், ரூ. 20 ஆயிரம் என்று உள்கடன் வாங்கிக் கொண்டிருந்தோம், இன்று ரூ. 3 லட்சம் வரை உள்கடன் தருகிறோம். இத்தனை ஆண்டுகளாக நாங்கள் சிறப்பாக செயல்பட, எங்கள் குழுவின் ஒத்துழைப்பு தான் காரணம்." என்று அவர் பேசும்போது சக குழு உறுப்பினர்கள் இ-சேவை மையத்திற்குள் வந்தனர். அவர்களிடம் குழுவைக் குறித்துக் கேட்டேன்.

அக்குழுவின் முதல் பிரதிநிதியாக இருக்கும் கீதா, "நான் 2014 ஆம் ஆண்டு தான் குழுவில் சேர்ந்தேன். அப்போது என்னுடைய மாத சம்பளமே மூன்றாயிரம் தான் அதில் இருந்து மாதம் இருநூறு ரூபாய் சேமிப்பாக செலுத்துவேன். எனக்கு சேமிக்கும் பழக்கத்தை உருவாக்கியதே இந்தக் குழுதான். இப்போது எனக்கென சொந்த வீடு கட்டிவிட்டேன். சுய தொழில் செய்கிறேன். இப்படி என்னுடைய வாழ்வாதாரம் உயர்ந்ததை நினைத்து மனநிம்மதியாக இருக்கிறது.

சேமிப்பு மட்டுமல்ல, நான் இரண்டு பட்டங்கள் பெற்ற பட்டதாரியானதற்கும் இக்குழுவே காரணம். பெற்றோர்களால் என்னை 12 ஆம் வகுப்பு வரைதான் படிக்க வைக்க முடிந்தது. உயர்கல்வி பயில குழுவே

முதுகெலும்பாக இருந்தது. இங்கு வாங்கும் உள்கடன் மூலமாக தொலைதூரக் கல்வி வழியே பிபிஏ மற்றும் எம்பிஏ பட்டங்களைப் பெற்றேன். இந்தக் கல்வி எனக்கென தனிநம்பிக்கையையும் தைரியத்தையும் தந்துள்ளது." என்று பெருமிதத்துடன் பகிர்ந்தார்.

அன்று கடன் ... இன்று 1 லட்சம் சேமிப்பு

அவர் கூறியதை தலையசைத்துக் கேட்ட குழுவின் உறுப்பினர் கலைவாணி, "எங்கள் குழுவால்

முகப்பு அட்டை& புகைப்படங்கள்: பொன் காசிராஜன்

கீதாவிற்கு மட்டுமல்ல, எங்கள் அனைவருக்கும் பல நன்மைகள் நடந்துள்ளன. எனக்கு 2011ஆம் ஆண்டு திருமணமானது. 2012 ஆம் ஆண்டு வரையில் சுய உதவிக் குழுவைப் பற்றி தெரியாது. எங்களது வீடும் வறுமையான ஒன்றே. அப்போது. இந்தக் குழுவில் கிடைத்த 20 ஆயிரம் ரூபாய் கடனுதவியால் தான் என்னால் பெட்டிக் கடை மற்றும் பூக்கடையைத் தொடங்க முடிந்தது. இதற்கிடையில் 100 நாள் வேலை செய்யும் விவசாயத் தொழிலாளர்களிடம் வேர்க்கடலை மற்றும் சுண்டல் விற்கும் தொழிலும் மேற்கொண்டேன். இப்போது நிலையாக ஒரு பழக்கடை வைத்திருக்கிறேன். எங்களிடம் இருந்த நட்புறவும், விட்டுக் கொடுத்துச் செல்லும் பண்பும் தான் ஒருவரை ஒருவர் உயர்த்த உதவியது. குறிப்பாக, எங்களை கந்துவட்டி தொல்லையில் சிக்காமல் காப்பாற்றியது." என்று பெருமூச்சு விட்டார்.

> **"எங்களிடம் இருந்த நட்புறவும், விட்டுக் கொடுத்துச் செல்லும் பண்பும் தான் ஒருவரை ஒருவர் உயர்த்த உதவியது."**

"அதில் சிக்கியதை மறக்க முடியாது" என்று குழுவின் இரண்டாம் பிரதிநிதி கஜலட்சுமி பேசத்தொடங்கினார். "என் குடும்பம் விவசாய பின்புலம் கொண்டது. ஒவ்வொரு ஆண்டும் பயிரிட, உரம் தெளிக்க என்று பணத்தின் தேவை அதிகம். அதனால், கந்துவட்டி வாங்கும் பழக்கமும் இருந்தது. அந்த ஆண்டு நினைத்தபடி அறுவடை வரவில்லை, வட்டி மீது வட்டி ஏறி என்ன செய்வதென்று தெரியாமல் நின்றேன். இந்தக்குழு தான் நான் கடனில் இருந்து மீண்டுவர உதவியது. இப்போது என்னிடம் ரூ. ஒரு லட்சத்திற்கு மேல் இருக்கும் கையிருப்பை நினைக்கையில் நிம்மதி வருகிறது." என்று சிரித்த முகத்தோடு பேசினார்.

பாரதியின் பெண்கள்

"எங்கள் அனைவரிடமுமே ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் சேமிப்பு இருக்கிறது. குழுவாகப் பார்த்தால் 13 லட்ச ரூபாய் சேமிப்பு " என்கிறார் ஊக்குநர் தேவகி. தொடர்ந்து பேசியவர், "கல்வியின் முக்கியத்துவத்தை நாங்கள் உணர்ந்ததால் எங்கள் பகுதியில் இருக்கும் மாணவர்களுக்கு கணினி பயிற்சி வகுப்புகள் நடத்துகிறோம். மேலும்,பள்ளிகளில் கட்டாய கல்வி உரிமைச் சட்டம் குறித்து, பெண் கல்வி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துகிறோம். எங்கள் பகுதியில் ரத்ததான முகாம் நடைபெற்றால், அதையும் சுகாதாரமான முறையில் நடத்த உதவி செய்கிறோம். இப்படி தொடர்ச்சியாக நாங்கள் செய்யும் பணிகளுக்காக 'மணிமேகலை விருது' கிடைத்தது. பல ஆண்டுகளுக்கு முன்பு, இந்த விருதை வாங்க வேண்டும் என்று நாங்களும் கனவு கண்டோம், அது தற்போது நிறைவேறிவிட்டது." எனக்கூறி மகிழ்ந்தார்.

"இந்தக் குழுவால் எங்கள் ஊர் பெண்களுக்கு நாங்கள் மரியாதையை சம்பாதித்துள்ளோம். பெயரில் மட்டுமல்ல வாழ்விலும் பாரதியின் புதுமை பெண்களாகவே திகழ்கிறோம்" என்று பெருமிதம் கொள்கிறார்கள் புதுமை மகளிர் சுய உதவிக்குழுவினர்.

– ப.க. புகழ்ச்செல்வி

தயாரிப்புக்கு புகழ் சேர்க்கும் உத்திகள்

வியாபாரம் தொடங்கும் கனவு நம்மில் பலருக்கும் இருக்கும். தனது பிராண்ட்டை நிலைநாட்டச் செய்வது, அந்தக் கனவுக்கு உதவும் வகையில், உங்கள் கண்டென்ட் முயற்சிக்கு சரியான திசை காட்டும் ஒரு நடைமுறை வழிகாட்டி தான் 3H உள்ளடக்க உத்தி.

முதலில் யூடியூப் மற்றும் கூகுள் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த 3H உத்தி, வீடியோ காட்சிகளை உருவாக்குவதற்கான திட்டமிடலின் ஓர் அடித்தளமாக இருந்தது. ஆனால் இன்று, இன்ஸ்டாகிராம், முகநூல், யூடியூப் போன்ற பல்வேறு சமூக ஊடகங்களிலும் இது ஒரு நம்பிக்கைக்குரிய மார்க்கெட்டிங் உத்தியாக மாறிவிட்டது.

பார்வையாளர்களை ஈர்க்கவும், அவர்களோடு உறவுகளை வளர்க்கவும், உங்கள் பிராண்டை மனதில் பதிய வைக்கவும் இந்த 3H உள்ளடக்க உத்தி மிகச்சிறந்தது. சரி முதலில் அதென்ன 3H என்று பார்த்து விடலாம்.

வகை	நோக்கம்	நேரம்
ஹீரோ Hero	பிராண்ட் அடையாளம், உணர்வுப் பாதிப்பு	மாதம் ஒரு முறை
ஹப் Hub	குழுவின் செயல்பாடு, மகிழ்வான சிறு தருணங்கள் குறித்த பதிவின் வழி நெருக்கமான உறவு	வாரந்தோறும்
ஹெல்ப் Help/Hygiene	தேடலுக்கான பதில், தொழில்நுட்ப விளக்கம்	வாரத்திற்கு 2-3 முறை

3H - உங்கள் உள்ளடக்கத்துக்கான மூன்று முகங்கள் ஹீரோ (Hero), ஹப் (Hub), ஹெல்ப் (Help) / (ஹைஜீன்) Hygiene. இவைதான் அந்த 3H உத்தி. இவை வெறும் வார்த்தைகள் அல்ல உங்கள் பிராண்டின் முகம்.

உங்களைப் பற்றியும், உங்கள் தயாரிப்பைப் பற்றியும் வலிமையுடன் வெளிப்படுத்த அவசியமான கட்டமைப்பு இது. இந்த மூன்று H-களும், முறையாக பயன்படுத்தப்பட்டால் உங்கள் உள்ளடக்கங்களின் சீரான வளர்ச்சியை நிலைநாட்ட முடியும்.

ஹீரோ (Hero)

ஒரு பிராண்ட் அல்லது ஒரு குழு அல்லது ஒரு தயாரிப்புக்கு பின்னால் உள்ள, கவரும் உண்மைக் கதையைச் சொல்லும் இடம் ஹீரோ பகுதி என்று அழைக்கப்படும். இந்த ஹீரோ உள்ளடக்கம் உங்கள் பதிவின் அடையாளத்தை காண்பவர் மனதில் ஆழமாக பதியும்.

உதாரணம்:

"மண்ணின் வாசனையுடன் பிறந்த சோப்புகள்" - என்று ஒரு சிறிய வீடியோ போட்டாலும், அது பார்ப்போர் மனதில் பதியும்.

ஆனால், எல்லா காலங்களிலும் இது எடுபடாது. பண்டிகை காலங்களில், நிறுவனத்தின் முக்கிய சாதனை நாட்களில், நிறுவன தினத்தில் பதிவிட வேண்டும்.

மேலும், காட்சிகள் உண்மையானதாக நம்பகத்தன்மை தருவதாக இருக்க வேண்டும். பொய்யற்ற அதே சமயம் காண்பவரின் உணர்ச்சியைத் தொடும் வகையில் வார்த்தைகளும், மென்மையான பின்னணி இசையும் இடம்பெற வேண்டும்.

மொத்தத்தில் ஹீரோ வீடியோ, உங்கள் தயாரிப்பின் காரணத்தை விளக்க வேண்டும். வாடிக்கையாளரின் ஏன் வாங்க வேண்டும் என்ற கேள்விக்கும் விடை சொல்ல வேண்டும்.

ஹப் (Hub)

வாடிக்கையாளர்கள் உங்கள் பக்கத்தைத் தொடர, உள்ளடக்கங்களைத் தொடர்ந்துப் பார்க்க காரணம், 'ஹப்' வகை உள்ளடக்கங்கள் தான்.

உதாரணம்:

"சுய உதவிக் குழு கண்காட்சியில் எங்கள் குழு"

"வாடிக்கையாளரின் பாராட்டு மடல்"

"குழு உறுப்பினரின் மகிழ்ச்சி தரும் வாழ்க்கை மாற்றம்"

இப்படியாக வாடிக்கையாளருடன் உங்கள் கொண்டாட்டங்களை, மகிழ்வைப் பகிர்ந்துக் கொள்வது பார்வையாளரை உங்களோடு ஒருவராக எண்ண வைக்கும். வாரத்திற்கு ஒரு ஹப் வீடியோ போதுமானது, அது உங்களுக்கும் பார்வையாளர்களுக்குமான நெருக்கத்தை அதிகரிக்கும், ஒரே குடும்பமாக உணர வைக்கும்.

மாதத்திற்கான ஹீரோ–ஹப்–ஹெல்ப் கலந்த திட்டம்

வாரம்	ஹெல்ப் / ஹைஜீன்	ஹப்	ஹீரோ
1	Instagram Bio எப்படி அமைப்பது?	குழுவின் முதல் கண்காட்சி அனுபவம்	—
2	விற்பனைக்கேற்ற உள்ளடக்கத்தை அமைப்பது எப்படி?	உறுப்பினரின் பிறந்தநாள் வாழ்த்து	—
3	வாட்சாப்பில் தானியங்கி குறுஞ்செய்தி (Automation message) அமைப்பது எப்படி?	வாடிக்கையாளரின் அனுபவப் பகிர்வு	—
4	GeM Portal எப்படி பதிவு செய்வது?	முதலாவது பெரிய ஆர்டர் கிடைத்தது குறித்து	100ஆவது ஆர்டர் கிடைத்ததற்காக சிறப்பு ரீல்ஸ்/ யூடியூப் ஷார்ட்ஸ்

Analytics மூலம் எது வேலை செய்கிறது என்பதைக் கண்டறியுங்கள்

அளவீடு	நோக்கம்	கருவி
பதிவின் பரவல் (Reach)	ஹீரோ – எத்தனை பேர் பார்த்தார்கள்?	இன்ஸ்டாகிராம் இன்சைட்ஸ் (Instagram
ஈடுபாடு (Engagement)	ஹப் – யார் பதிலளிக்கிறார்கள்?	லைக் (Likes), ஷேர் (Shares), (Comments)
தேடுதல் (Search Clicks)	ஹெல்ப் – யார் தேடி வந்தார்கள்?	கூகிள் கன்சோல் (Google Console)
பார்க்கும் நேரம் (Watch Time)	ஹீரோ / ஹெல்ப் – எத்தனை நொடிகள் பார்வை?	யூடியூப் ஸ்டுடியோ (YouTube Studio)

3H உங்களைப் பற்றியும், உங்கள் தயாரிப்பைப் பற்றியும் வலிமையுடன் வெளிப்படுத்த அவசியமான கட்டமைப்பு இது.



இந்த 3H உத்தி, பெரு நிறுவனங்களுக்கானது மட்டுமல்ல; நம்மை போன்று தனித்தோ குழுவோடோ தொழில் செய்யும் ஒவ்வொருவருக்கும் உரியதே.

உங்களுக்கேற்ற கருவிகள் – உங்கள் கைபேசியில்

பணி	கருவி
போஸ்டர் வடிவமைப்பு	கேன்வா(Canva) அடோப் எக்ஸ்பிரஸ் (Adobe Express)
வீடியோ எடிட்டிங்	கியாப்கட் (CapCut) இன்ஷார்ட்ஸ் (InShot) விஎன் (VN)
திட்டமிடல்	மெட்டா சூட் (Meta Suite), நோஷன் (Notion)
தமிழ் தட்டச்சு	கூகிள் இன்புட் டூல்ஸ் (Google Input Tools)
முக்கியச் சொற்கள் ஆய்வுக் கருவிகள் (அ) தகவல் தேடல் களஞ்சியம்	கூகிள் டிரெண்ட்ஸ் (Google Trends) ஊபர் சஜஸ்ட் (Ubersuggest), எஸ்எம்இரஷ் (SEMrush)

ஹெல்ப் (Help) / (ஹைஜீன்) Hygiene

கூகுள், யூடியூப், இன்ஸ்டாகிராம் – இவற்றில் 'எப்படி' என்று தொடங்கும் தேடல்களுக்கு, நீங்கள் பதிலாக இருப்பது முக்கியம்.

உதாரணம்:

- "கைவினைப் பொருட்களை இன்ஸ்டாகிராமில் எப்படி விற்கலாம்?"
- "வாடிக்கையாளர் உத்தரவை வாட்சாப்பில் பெற சிறந்த வழிகள்"
- "புதிய வாடிக்கையாளரை உறுதிப்படுத்த 3 சிறந்த உள்ளடக்க உத்திகள்"

தொழில்நுட்பம் + தரம் + நம்பிக்கை இணைந்து உருவாகும் ஹெல்ப் வகை வீடியோக்கள் ஆடம்பரமல்ல, அவை உங்கள் மீதான நம்பிக்கையின் வடிவமாக இருக்கும்.

மாதத்திற்கான ஹீரோ-ஹப்-ஹெல்ப் கலந்த திட்டம் வாரம் ஒருமுறை இன்சைட்ஸை (Insights) பார்ப்பது, உங்கள் வியாபார இலக்கைச் சரியாக விரைவாக சென்றடைய உதவும்.

இவை அனைத்தும் மொபைலில் இயங்கும். உங்களிடம் ஒரு கைப்பேசி இருந்தால், ஒரு மார்க்கெட்டிங் அணியே உங்களோடு.

ஹீரோ – உங்கள் கதை மனதில் பதியவைக்கும்.
ஹப் – உங்கள் உறவை நிலைநாட்டும்.
ஹெல்ப் / ஹைஜீன் – உங்கள் அறிவு, 'எப்படி?' என்ற கேள்விக்கு பதிலாக அமையும்.

இப்படியான, இந்த 3H உத்தி, பெரு நிறுவனங்களுக்கானது மட்டுமல்ல; நம்மை போன்று தனித்தோ குழுவோடோ தொழில் செய்யும் ஒவ்வொருவருக்கும் உரியதே.

உங்கள் தயாரிப்பும், உங்கள் பார்வையும் இணையத்தின் நாளைய அடையாளமாக வளர வாழ்த்துகள். **– ஹரிஹரன் ஈ கா செ**

“இசையமைப்பாளருக்கு

தமிழ் திரையுலகில் சமீபகாலங்களில் அதிகம் உச்சரிக்கப்படும் பெயர் ரேவா. தமிழ், மலையாளம், மராத்தி மொழிப் படங்களுக்கு இசையமைத்தவர். தமிழில் வெளியான அயலி என்ற இணையத் தொடரின் மூலம் பரவலான கவனம் பெற்றவர். தொடர்ந்து ஐந்தாம் வேதம் இணையத்தொடர், கள்வன், ஆசை போன்ற படங்களுக்கும் பின்னணி இசை அமைத்திருக்கிறார். நமது இதழுக்காக அவருடைய இசையமைப்புக் கூடத்தில் அவருடன் உரையாடினோம்...

> “எந்த மொழித் திரைப்படமாக இருந்தாலும், அங்குள்ள மண்ணின் இசை குறித்து ஆய்வு செய்வேன். தொடர்ந்து தேடுவேன். இது எனக்கு உதவியாக இருந்தது.”

உங்களின் சிறுவயது பற்றிச் சொல்லுங்களேன்? கர்நாடக சங்கீத இசைக் கலைஞர்களின் வாரிசுகள் பெரும்பாலும், பாடகராகவே முயற்சிப்பார்கள். மட்டுமின்றி, நீங்கள் ஃபேஷன் டிசைனிங்கும் படித்தவர். இசையமைப்புக்குள் உங்கள் ஆர்வம் சென்றது எப்படி?

என் தாத்தா, 'பாலக்காடு சேசாமணி' ஒரு மிருதங்க கலைஞர். ஆதலால், இளைமையிலேயே எனக்கு கலைகள் மீது ஆர்வம் வந்து விட்டது. கர்நாடக சங்கீதம் கற்றுக் கொண்டாலும், சிறுவயதில் இருந்தே ஓவியம், கவிதைகள் மீது என் ஆர்வத்தை செலுத்தி வந்தேன். ஓணம் போன்ற பண்டிகைகளுக்கு நானே இசையமைத்துப் பாடுவேன். கலைகள் மீது கொண்ட ஆர்வமே, ஃபேஷன் டிசைனிங் படிக்க எனக்கு உந்துசக்தியாக இருந்தது. சென்னையில் ஃபேஷன் டிசைனிங் படித்த போது, என் மாமா ராமநாதன் நடத்தி வந்த ஸ்டுடியோவில், மியூசிக் ப்ரொடொக்சன் கற்றுக் கொண்டேன். ஆரம்பத்தில், முக்கால்வாசி நேரம் படிப்பிலும், கால்வாசி நேரம் இசையிலும் என் கவனத்தை செலுத்தி வந்தேன். இசை என்னை உள் இழுத்துக் கொண்டதால், படிப்பு கால்வாசி நேரமாகவும், இசை முக்கால்வாசி நேரமாகவும் மாறியது. பின்னர், வேலைக்குச் சென்று விட்டேன். கைநிறைய சம்பளம் கிடைத்தது. இருந்தாலும், என் ஆன்மா இசையை தேர்ந்தெடுத்தது. அந்த வேலையை உதறி விட்டு, இசையமைக்க வந்தேன். அதற்கு என் பெற்றோர், விஸ்வநாதன், சாரதாம்பாள் உறுதுணையாக இருந்தனர்.

ஆரம்பத்தில், விளம்பரப்படங்கள், குறும்படங்களுக்கு இசையமைத்துக் கொண்டிருந்தேன். பின், மலையாளத்தில் மாங்கல்யம் தந்துனானே என்ற படத்தில், ஒரு பாடல் அமைக்க வாய்ப்பு கிடைத்தது. அதன்பிறகு, மராத்தியில்

தம் சமூகப் பொறுப்புண்டு"

பணிபுரிய வாய்ப்பு கிடைத்தது. அதற்கடுத்து விஜய் சேதுபதி நடித்த 'முகிழ்' குறும்படத்துக்கு இசையமைத்தேன். அதன்பிறகு வெளியான 'அயலி' இணையத்தொடர் எனக்கு பெரும் வெளிச்சத்தை பெற்றுத் தந்தது. அதிலிருந்து நிறைய படங்களுக்கு இசையமைத்து வருகிறேன்.

ஒரு பெண் இசையமைப்பாளராகும் போது, அது எந்த வகையில் திரையில் பிரதிபலிக்கிறது?

கலையின் எந்த வடிவமாக இருந்தாலும், அது உணர்வுகளின் பிரதிபலிப்பு தான். உணர்வு என்பது ஆண், பெண் இருவருக்கும் பொதுவானது. இருந்தாலும், அதில் ஆண் பார்க்கும் கோணம் வேறு. பெண் பார்க்கும் கோணம் வேறு. அதை வார்த்தைகளில் சொல்ல முடியாது. கதாபாத்திரங்களுக்கும், திரையில் நிகழும் சம்பவங்களுக்கும் தேவையான இசை, இரண்டு தரப்பிலிருந்தும் கொடுக்க முடியும். அதே நேரத்தில், அதை ஒரு பெண் கையாளும் போது, அந்த அணுகுமுறையில் நிறைய மாற்றம் இருக்கும்.

குறும்படமோ, திரைப்படமோ ஒரு படத்துக்கு ஏன் இசை அவசியம்?

இசை, உங்களின் ஆன்மாவோடு பேசுவதற்கான வடிவம். கண்கள் திரையில் தெரியும் காட்சிகளைப் பார்க்கும் போது, இசை காதுகள் வழியாக இதயத்துக்கு செல்லும் போது, திரையில் தெரியும் கதாபாத்திரங்களாக நம்மை மாற்றும் மாயம் நடக்கிறது. அடிமனதில் தேங்கிக் கிடக்கும் உணர்வுகளை, இசை தட்டி எழுப்பும் போது, காட்சிகள் முழுமை அடையத் துவங்குகிறது. எனவே, இசை அவசியமாகிறது. இது, அதனதன் தளங்களில் வேறுபடுகிறது. வணிக சினிமா பார்வையாளர்களுக்கு வேறு ஒரு கோணத்திலும், கலை ரீதியான சினிமாக்களுக்கு வேறு வகையில் அதன் தன்மையை பொறுத்து மாறுபட்டு வழங்குகிறது. மற்றபடி, உணர்வுகளை வெளிக் கொண்டு வருவதற்கு இசை, மிக மிக முக்கியம்.

மலையாளம், மராத்தி, தமிழ் என மூன்று மொழிகளிலும் இசை அமைத்திருக்கிறீர்கள். அந்த மண்ணுக்கான இசைத்தன்மையை எப்படி கொண்டு வருகிறீர்கள்?

எந்த மொழித் திரைப்படமாக இருந்தாலும், அங்குள்ள மண்ணின் இசை குறித்து ஆய்வு செய்வேன். தொடர்ந்து தேடுவேன். இது எனக்கு உதவியாக இருந்தது. மலையாளத்தில் நான் முதன் முதலில் இசையமைத்தது, ஒரு கிறிஸ்தவ திருமண பாடல். அந்த பாடலை இசையமைப்பதற்கு முன், அங்குள்ள கிறிஸ்தவ திருமணப் பாடல்களை நிறைய கேட்டேன். அதன்

பண்பாட்டையும், இசைத் தன்மையையும் புரிந்து கொண்டேன். அது எனக்கு கை கொடுத்தது. மராத்தியை பொருத்தமட்டில், நான் சில பரிசோதனை முயற்சிகள் செய்தேன். ஏற்கனவே அங்கு இருக்கும் பாடல்களை தன்மையை மீறி, தமிழ் மண்ணில் இருக்கும் மெலடிகளை அங்கு பரிசோதித்துப் பார்த்தேன். அதற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது, பார்வையாளர்களுக்கு கதைக்கு நியாயம் செய்யும் வகையில் இசையைக் கொடுத்தால், எந்த மண்ணுக்காரர்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்பது என் அனுபவம். அதற்கு நாம் நிறைய தேடி, நிறைய உழைக்க வேண்டும்.

ஒரு திரைப்படத்துக்கு நீங்கள் இசையமைக்க ஒத்துக் கொண்டீர்கள் என்றால், அப்படம் பேசும் அரசியலையும் ஏற்றுக் கொள்கிறீர்கள் என்று புரிந்து கொள்ளலாமா?

எல்லோருக்கும் சமூகப் பொறுப்பு உண்டு என்பதைப் போல, இசையமைப்பாளர்களும் உண்டு என்பதை நான் முழுமையாக நம்புகிறேன். எனக்கு வாய்ப்பு வருகிறது என்றால், எல்லா படங்களையும் நான் ஒத்துக் கொள்வதில்லை. எனக்கு அதன் கருத்து உடன்பட்டால் மட்டுமே இசை அமைப்பேன். அதே நேரத்தில், படத்துக்கு வெளியே பேசப்படும் கருத்துக்கள் என்னை பாதிக்காத வகையில் மனதை வடிவமைத்துக் கொள்வேன்.

> “இங்கு பல பெண்கள் இசையமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பிரபலமாகாததால் வெளியே தெரியவில்லை.”

பெண் இசையமைப்பாளரான நீங்கள் என்னென்ன நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொள்கிறீர்கள்?

நான் பெரும்பாலும் இரவில் இசை அமைப்பதில்லை. அதிகாலையில் தொடங்கி எட்டு மணிக்குள் முடித்து விடுவேன். பிறகு வீட்டு வேலைகள் இருக்கும். சூரியனின் ஒத்திசைவுக்கு தகுந்தாற் போல் என் நேரங்களை வடிவமைத்துக் கொள்வேன். எனக்கு தூக்கமும், அமைதியும் தேவை. அதே நேரத்தில், எல்லா நேரமும் நாம் எதிர்பார்ப்பது போல் அமையாது. சில நேரம் பாடல்களின் ஒலிப்பதிவு இருக்கும். அந்த நேரத்தில் வேலைக்கு முக்கியத்துவம் கொடுப்பேன். அதற்காக அதுவே கதி என்று இருக்க மாட்டேன். இயக்குநர்களும் அதை புரிந்து கொள்வார்கள். குடும்ப பொறுப்பையும், இசையமைப்பையும் ஒன்றுடன் ஒன்று உரசிக் கொள்ளாத வகையில் வடிவமைத்துக் கொள்வேன். உடலுக்கும் முக்கியத்துவம் கொடுப்பேன். சுவர் இருந்தால் தானே சித்திரம்?

பெரிய அளவில் பெண்கள் திரை இசைத்துறையில் ஈடுபடாததற்கு என்ன காரணம்?

இல்லை. எனக்குத் தெரிந்தே நிறைய பெண்கள் இசையமைப்பாளர் ஆவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இங்கு பல பெண்கள் இசையமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பிரபலமாகாததால் வெளியே தெரியவில்லை.

இங்கு படங்களை மார்க்கெட்டிங் பண்ண வெற்றி என்ற பிரபலமான முகம் தேவைப்படுகிறது. அவர்களை நான் குறை கூறவில்லை. அதுதான் கள எதார்த்தம். அதையும் மீறி, ஒரு பெண் ஒரு படத்துக்கு இசையமைக்க வேண்டும் என்றால், அந்தக் குழுவையே சம்மதிக்க வைக்க வேண்டும். அதை தாண்டி வருவதில் பெண்களுக்கு நிறைய சிக்கல்கள் இருக்கின்றன. அதே நேரத்தில் நிறைய பெண்கள் வந்து கொண்டு இருக்கிறார்கள். தொடர் முயற்சியும் அர்ப்பணிப்பும் இருந்தால், விரைவில் நிறைய பெண்கள் வெளியே தெரிய வருவார்கள்.

–சுடர்

மதி

வணிகம் வளர்க்க

தீபம் 2 மகளிர் சுய உதவிக் குழு,
மயிலாடுதுறை மாவட்டம்.
கைபேசி : 94448 85141
செயற்கை ஆபரணங்கள்

சோழா மகளிர் சுய உதவிக் குழு,
மயிலாடுதுறை மாவட்டம்.
கைபேசி : 76399 13150
சுவையான தின்பண்டங்கள்

மாரியம்மன் முதியோர் சுய உதவிக் குழு,
கிருஷ்ணகிரி மாவட்டம்.
கைபேசி : 94422 10939
உல்லன் நூல் பொம்மைகள்

அப்துல் கலாம் மகளிர் சுய உதவிக் குழு,
கிருஷ்ணகிரி மாவட்டம்.
கைபேசி : 80728 77667
சுடுமண் பொம்மைகள்

வைடூரியம் மகளிர் சுய உதவிக் குழு,
கிருஷ்ணகிரி மாவட்டம்.
கைபேசி : 91590 79033
சிறுதானிய சத்து மாவு, பிரண்டை, வல்லாரை போன்றவற்றால் தயாரிக்கப்படும் இட்லி பொடி வகைகள்

முல்லை மகளிர் சுய உதவிக் குழு,
மயிலாடுதுறை மாவட்டம்.
கைபேசி : 94966 36679
பனையோலையால் செய்யப்பட்ட கலைப் பொருட்கள் பொடி வகைகள்

மதி

மகளிர் சுய உதவிக் குழுவை மேலும் வளர்க்க எண்ணுவோர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் இயங்கும் 'மதி சந்தை' (www.mathisandhai.com) எனும் வலைதளம் வழியே பொருட்களை வாங்கலாம்.

அமைப்பு சாரா தொழி

கட்டுப்பாடான வேலை நேரம், முறையான அமைப்பு, சீரான மாத ஊதியம், ஊதியத்துடன் கூடிய விடுப்பு, சேம நல நிதி (PF), பணிப் பாதுகாப்பு, மருத்துவக் காப்பீடு போன்ற எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி, நம் நாட்டில் கோடிக்கணக்கானோர் உழைத்து வருகின்றனர். பெரும்பாலும் அன்றாடங்காய்ச்சியைப்போல வாழ்ந்து வரும் இவர்களின் 60 வயதுக்குப் பிறகான வாழ்க்கை மிகவும் சவாலானது. இத்தகைய அமைப்பு சாரா தொழிலாளர்களின் துயர் துடைக்கும் விதமாகத் தொடங்கப்பட்டதே 'அடல் ஓய்வூதியத் திட்டம்'.

அடல் ஓய்வூதியத் திட்டம் என்பது என்ன?

இத்திட்டம் அமைப்பு சாரா தொழிலாளர்களின் ஓய்வுக் காலத்தில் ஒவ்வொரு மாதமும் நிலையான ஊதியத்தை வழங்குவதற்காக ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டது. அரசின் உத்தரவாதத்துடன் கூடிய இத்திட்டத்தில் எந்தவொரு இந்தியக் குடிமக்களும் இணைந்து பயன்பெறலாம்.

திட்டத்தில் இணைவது எப்படி?

இத்திட்டத்தில் சேர்வதற்கான குறைந்தபட்ச வயது 18 மற்றும் அதிகபட்ச வயது 40 ஆகும். தபால் அலுவலகங்கள், பொதுத்துறை மற்றும் தனியார் வங்கிகள் மூலம் கணக்குத் தொடங்க முடியும். ஆன்லைன் மூலமும் இந்தக் கணக்கைத் தொடங்கலாம். வங்கிச் சேமிப்பு கணக்கிலிருந்து தானியங்கியாக பற்று வைக்கும் (ஆட்டோ டெபிட்) வசதி மூலம் மாதம், காலாண்டு, அரையாண்டு அடிப்படையில் சந்தா செலுத்திக் கொள்ளலாம்.

முதலீட்டுக் காலம், ஓய்வூதியம் எவ்வளவு?

திட்டத்தில் இணையும் ஒருவர், தன் 60 வயது வரை குறிப்பிட்டத் தொகையை ஒவ்வொரு மாதமும் முதலீடு செய்து வருவது அவசியம். 60 வயதுக்குப் பின், ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்சம் ஆயிரம் ரூபாய் முதல் அதிகபட்சம் ஐந்தாயிரம் ரூபாய் வரை, வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியம் பெற்றுக் கொள்ளலாம். இதில் ரூ.2 ஆயிரம், ரூ.3 ஆயிரம், மற்றும் ரூ.4 ஆயிரம் என்பதுபோலவும், ஓய்வூதியம் கிடைக்கும் திட்டங்களைத் தேர்வு செய்ய முடியும். உதாரணமாக, 18 வயதுடைய ஒருவர் தன் 60 வயதில் ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் பெற விரும்பினால், அவர் மாதம் ரூ.42 முதலீடு செய்து வர வேண்டும். இதுவே 39 வயதுடைய ஒருவர் இத்திட்டத்தில் சேர்ந்தால், அடுத்த 21 ஆண்டுகளுக்கு, அவர் மாதம் ரூ. 264 செலுத்த வேண்டும்.

அரசின் உத்தரவாதத்துடன் கூடிய இத்திட்டத்தில் எந்தவொரு இந்தியக் குடிமக்களும் இணைந்து பயன்பெறலாம்.

ழிலாளர்களுக்கான அற்புத முதலீடு!

முத்தான மூன்று நன்மைகள்!

சந்தாதாரருக்கு வாழ்நாள் முழுவதும் ஆயிரம் முதல் ஐந்தாயிரம் ரூபாய் வரை குறைந்தபட்ச ஓய்வூதியத்திற்கான உத்தரவாதம் உண்டு.

சந்தாதாரரின் மரணத்திற்குப் பிறகு, அதே ஓய்வூதியம் அவரின் துணைவருக்கு வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும். இருவரும் மரணிக்கும் பட்சத்தில், 60 வயது வரை திரட்டப்பட்ட ஓய்வூதிய பணம், பரிந்துரைக்கப்பட்ட நபருக்கு வழங்கப்படும். நாம் சேர்த்து வைத்த சேமிப்பு நிதி, நம் கைகளுக்கு வந்து சேர்வது உறுதி.

இடையிலேயே கணக்கை முடிக்கலாம்!

இத்திட்டத்திலிருந்து 60 வயதிற்கு முன்பாக, பாதியிலேயே வெளியேறவும் அனுமதிக்கப்படுகிறது. அப்போது, சந்தாதாரர் கட்டிய தொகை மற்றும் அதற்குரிய வட்டி வருமானம் மட்டுமே வழங்கப்படும். அவருக்காக அரசு முதலீடு செய்த பணமும், அதற்கான வருமானமும் வழங்கப்படாது.

அடல் ஓய்வூதிய கணக்கு மூடப்பட்டாலும், அதனுடன் இணைக்கப்பட்ட சேமிப்பு வங்கிக் கணக்கை சந்தாதாரர் மூடக்கூடாது. ஏனெனில், சந்தாதாரர் பெற வேண்டிய தொகை சேமிப்பு வங்கிக் கணக்கிற்கு மாற்றப்படும். 'அடல்' திட்டத்தில் சேமிக்கப்பட்ட முதலீடு, வரவு வைப்பதற்கு முன் சேமிப்பு வங்கிக் கணக்கை மூடுவது, சந்தாதாரர் தன் தொகையைப் பெறுவதில் சிக்கல்களை உருவாக்கலாம்.

சந்தாதாரருக்கு இறப்பு நேர்ந்தால்...

கெடுவாய்ப்பாக, அசல் சந்தாதாரர் 60 வயதை அடையும் முன்னரே இறக்கும் பட்சத்தில், அதே கணக்கில் பங்களிப்பைத் தொடர அவரது துணைவருக்கு உரிமை உண்டு. அதைத் துணைவரின் பெயரில் பராமரிக்கலாம்.

கணக்கைத் தொடர விருப்பமில்லை எனில், அதுவரை சந்தாதாரர் கணக்கில் சேர்த்துள்ள ஓய்வூதியம், நிகர வட்டியுடன் திருப்பித் தரப்படும். கணக்கு பராமரிப்புக் கட்டணங்களைக் கழித்த பின்னரே, இத்தொகை வழங்கப்படும்.

சந்தாதாரரின் கணக்குக்கு உரிமை கோருபவர், சம்பந்தப்பட்ட வங்கி அல்லது தபால் அலுவலகத்தில் இறப்புச் சான்றிதழின் நகலுடன், கணக்கு முடிப்புப் படிவத்தைச் சமர்ப்பித்தல் அவசியம்.

தேவையான ஆவணங்கள்:

- வங்கிக் கணக்கு
- ஆதார் அட்டை
- துணைவர் (கணவன் / மனைவி), வாரிசு நபரின் (நாமினி) விவரங்கள் அவசியம்.

பொதுவான நடைமுறைகள்:

அடல் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்த பிறகு, பதிவு செய்யப்பட்ட சந்தாதாரரின் முகவரிக்கு வருடத்திற்கு ஒருமுறை கணக்குப் பரிவர்த்தனை அறிக்கை அனுப்பி வைக்கப்படும்.

வருமான வரி செலுத்துவோர் இத்திட்டத்தில் இணைய தகுதியற்றவர்கள்.

சந்தாதாரரின் முகவரி மற்றும் தொலைப்பேசி எண் போன்ற தனிப்பட்ட தகவல்களை மாற்றுவதற்கு தேவையான ஆவணங்களை சம்பந்தப்பட்ட கிளையில் சமர்ப்பிக்க வேண்டும்.

திட்டத்தின் இடையிலேயே, ஓய்வூதியத்தின் அளவீட்டை அதிகரிக்கவும், குறைக்கவும் (ஆயிரம் ரூபாய் முதல் ஐந்தாயிரம் ரூபாய் வரை) முடியும். அதற்கேற்ப முதலீட்டுத் தொகையும் மாறுபடும்.

அதிகரிக்கும் போது, வேறுபாட்டுத் தொகையைக் கணக்கில் செலுத்த வேண்டும். குறைக்கும் போது, வேறுபாட்டுத் தொகை சந்தாதாரருக்கு திருப்பிக் கொடுக்கப்படும்.

அடல் ஓய்வூதியத் திட்டத்திற்கென 'APY and NPS Lite' என்ற செயலி கூகுள் பிளே ஸ்டோரில் உள்ளது. இதன் மூலம் பரிவர்த்தனைகள் மற்றும் கணக்கின் விவரங்களைச் சரிபார்த்துக் கொள்ள முடியும். மேலும், அடல் திட்டத்துக்கான கால்குலேட்டர் வசதியைப் பயன்படுத்தி, நம் செலுத்த வேண்டிய மாத சந்தா தொகை மற்றும் மொத்த முதலீட்டுக் காலத்தையும் அறிந்து கொள்ள முடியும்.

விளிம்புநிலை உள்ள வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களின் அறுபது வயதுக்குப் பிறகான நல்வாழ்வுக்காக, தொடங்கப்பட்ட, இந்த ஓய்வூதியத் திட்டத்தின் மூலம் உழைக்கும் வர்க்கத்தினர் பயனடைந்து வருகின்றனர்.

கட்டட வேலைகள், குடிசைத் தொழில், தூய்மைப் பணி, முடி திருத்தல், விவசாயக் கூலிகள், கைத்தறி நெசவு, காலணி தைத்தல் என பல்வேறு அமைப்பு சாரா துறைகளில் பணிபுரிந்து வருபவர்களிடம் இப்படி ஒரு திட்டம் இருப்பதைப் பற்றி எடுத்துரைப்போம்!

–பெ.ரமணஹரிஹரன்

இணையத்தில் மோசடிகள்

இணையத்தில் நீங்கள் நைஜிரிய இணைய மோசடி தொடர்பான மீம்களை பார்த்திருக்கிறீர்களா? இந்த மீம்கள் சிரிக்க வைப்பதோடு, இதில் சிந்திப்பதற்கான தகவலும் அடங்கியுள்ளது.

இது பழமையான மோசடிகளில் ஒன்று. இணைய வசதி பரவலாகத் துவங்கிய 1990களில், நைஜீரியா 419 மோசடியும் அறிமுகமானது. பலருக்கும் இணையமும், இமெயிலும் புதுமையான நுட்பங்களாக இருந்த காலத்தில், இம்மோசடி இமெயில் மூலம் அரங்கேறியது.

ஆப்பிரிக்க நாடான நைஜிரியாவைச் சேர்ந்த பெரும் செல்வந்தர் ஒருவரிடம் இருந்து வருவது போல இந்த மெயில் அழையா விருந்தாளியாக வந்து சேரும். பல கோடிகள் வங்கியில் எடுக்க முடியாத நிலையில் இருப்பதாகவும், சில நூறு டாலர்கள் வங்கி கணக்கிற்கு மாற்றினால் அந்த பணத்தை எடுத்துவிடலாம் என்றும் மெயிலில் வேண்டுகோள் வைக்கப்பட்டிருக்கும்.

நைஜிரிய இளவரசர்

இந்த மெயிலை உண்மையென நம்பி பணம் கொடுத்து ஏமாந்தவர்கள் பலருண்டு. ஆனால், அடுத்து வந்த ஆண்டுகளில் இந்த மோசடி தொடர்பான விழிப்புணர்வு அதிகரித்து ஏமாற்று வேலைகளும் வெகுவாக குறைந்து விட்டது. இப்போது, இந்த மோசடியை கேலிக்குள்ளாக்கும் மீம்களை இணையத்தில் அதிகம் பார்க்க முடிகிறது. குறிப்பிட்ட ஒரு மீமில் வயதான பாட்டி ஒருவர் நைஜிரியா இளவரசருக்கு 10 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது, எங்கே என் செக் புத்தகம்? என கேட்பது போல இருக்கிறது.

இதே பாட்டி தோன்றும் இன்னொரு மீமில், இது ஒரு தந்திரம் பேசாமல் இருங்கள் என பேரன் பதில் அளிப்பது போல அமைந்துள்ளது.

நைஜிரியன் மோசடி ஆபத்து குறைந்து மீம்களாகி இருப்பது நல்ல விஷயம் தான். ஆனால், இன்னும் பலவிதமான இணைய மோசடிகள் தொடர்ந்து அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. இன்னும் புதுவித மோசடிகளும் அறிமுகம் ஆகின்றன.

அப்பாவி இணையவாசிகளை ஈர்த்து, மோசடி இணைப்புகளை கிளிக் செய்ய வைத்து, தனிப்பட்ட தகவல்களை திருடுவதில் துவங்கி, பணம் பறிப்பது வரை பலவித குற்றங்கள் நடைபெறுகின்றன. இந்த வகை மோசடிகள் பிஷிங் (phishing) என குறிப்பிடப்படுகின்றன. பயனாளிகள் தனிப்பட்ட தரவுகளை திருடி அவர் பெயரில் நடைபெறும் மோசடி அடையாள திருட்டு (identity theft) என கருதப்படுகிறது.

கேட்பிஷிங்

அடையாள திருட்டு மூலம் எதிர் பாலினர் ஏமாற்றப் படுவது கேட்பிஷிங் (Catfishing) என அழைக்கப்படுகிறது. இவைத்தவிர விதவிதமான வேலைவாய்ப்பு மோசடிகளும் இருக்கின்றன. சமூக ஊடக பதிவுகள் வாயிலாகவும் விஷமிகள் வலை விரிக்கின்றனர்.

பங்குச்சந்தையில் பணம் அள்ளலாம், பிட்காயின் மூலம் கோடீஸ்வரராகலாம் என ஆசைக்காட்டும் மோசடிகளும் இருக்கின்றன. இப்படி எண்ணற்ற மோசடிகள் இருந்தாலும், இவற்றின் அடிப்படையாக, பயனாளிகளின் பேராசையைத் தூண்டுவது அல்லது பேராபத்து அச்சத்தை உண்டாக்குவதாக இருக்கிறது.

பழமையான நைஜிரீய மோசடியை எடுத்துக் கொண்டால், பரிதாப உணர்வு தான் அடிப்படை என்றாலும், யாரோ ஒரு அப்பாவி இளவரசருக்கு உதவினால் பதிலுக்கு நமக்கும் பணம் கிடைக்கும் எனும் ஆசை தூண்டுதலாக அமைகிறது. வேலை வாய்ப்பு மோசடிகளிலும் இதே உத்தி தான் பின்பற்றப்படுகிறது.

அச்சம் தவிர்

அதே நேரத்தில், மற்ற வகை மோசடிகளில் பயனாளிகளை பதற்றத்தில் ஆழ்த்துவதில்

பெண்களுக்கான இணைய பாடத்திட்டத்தை அளிக்கிறது மத்திய அரசின் சைபர் சக்தி இணையதளம்:

https://isea.app/cybershakti/

குறியாக இருக்கின்றனர். வங்கி கணக்கு முடக்கப்பட்டுள்ளது என்றோ அல்லது பணம் பறிபோய் விடும் என்றோ, அச்சத்தை உண்டாக்கி, பாஸ்வேர்டு அல்லது ரகசிய பின் போன்றவற்றை பகிர வைப்பதை மோசடியாளர்கள் தங்கள் உத்தியாக கொண்டுள்ளனர்.

> “இணையம் மூலம் பணம் சம்பாதிக்கலாம் தான். ஆனால் அது திறன் சார்ந்த முறையில் இருக்க வேண்டும்.”

மேலும் அறியாமை காரணமாகவும் இணையவாசிகள் மோசடியில் சிக்கி கொள்வது உண்டு. இதற்கான தீர்வுகளில் ஒன்று, நம்பகமான இணையதளங்களை அறிந்திருப்பது என பார்த்தோம். இணையத்தின் ஆற்றலை உணர்த்தும் இன்னும் பலவித வழிகள் இருக்கின்றன. அவற்றையும் அறிந்து கொள்ள வேண்டும்.

இணையம் மூலம் பணம் சம்பாதிக்கலாம் தான். ஆனால் அது திறன் சார்ந்த முறையில் இருக்க வேண்டும். இதற்கு கடின உழைப்பும் தேவை. மாறாக, எளிதாக பெரும் தொகை கிடைக்கும் என யாரேனும் சொன்னால், இதெல்லாம் சாத்தியமே இல்லை எனும் யதார்த்தத்தை நினைவில் கொண்டு நிதானம் காட்ட வேண்டும்.

அதே போலவே, நிதி விஷயம் தொடர்பாக உடனடியாக செயல்படத் தூண்டும் வகையில் பதற்றத்தை ஏற்படுத்த முயற்சித்தாலும் நிதானம் காட்ட வேண்டும். ஒரு நிமிடம் யோசித்து கேள்வி கேட்டால் கூட விஷமிகள், இந்த மீன் வலையில் சிக்காது என உணர்ந்து நகர்ந்து விடுவார்கள். அந்த ஒரு நிமிடத்தை பயனாளிகள் தங்களுக்கு தாங்களே கொடுத்துக்கொள்ள வேண்டும்.

சைபர் விழிப்புணர்வு

சைபர் கிரிமினல்கள் பெரும் பாய்ச்சலில் செயல்பட்டாலும், காவல்துறையும் அதற்கு ஈடு கொடுத்து வருகிறது. குறிப்பாக சைபர் குற்றப் பிரிவு போலீசார் இணைய மோசடி குற்றவாளிகளை கண்காணித்து பொறி வைத்து பிடிப்பதில் முன்னேற்றம் கண்டு வருகின்றனர்.

எனவே, ஏதேனும் இணையத் தாக்குதலுக்கு இலக்கானால், செய்வத றியாமல் கலங்கி, மோசடியாளர்கள் கைப்பாவையாக மாறுவதை தவிர்த்து நிலைமையை எதிர்கொள்ளும் வழிகளை யோசிப்பது நல்லது. வங்கி மோசடிக்கு இலக்கானால் கூட, உடனடியாக புகார் செய்தால் நடவடிக்கை எடுத்து பணம் மீட்கப்படும் வாய்ப்பு இருப்பதை இந்திய ரிசர்வ் வங்கி தொடர்ந்து விழிப்புணர்வு விளம்பரங்களில் வலியுறுத்தி வருவதை கவனத்தில் கொள்ள வேண்டும். அதே போல இணைய செயல் பாடுகள் சார்ந்த அறியாமையையும் வெல்ல வேண்டும். அறிமுகம் இல்லாத எந்த இணைப்பையும் கிளிக் செய்ய வேண்டாம் என்பது போன்ற இணைய பாதுகாப்பு அடிப்படை அம்சங்களை அறிந்திருக்க வேண்டும், பின்பற்ற வேண்டும். அதே போல, பாஸ்வேர்டு பாதுகாப்பு தொடர்பாக சொல்லப்படும் அடிப்படை அம்சங்களையும் மீறாமல் செயல்படுத்த வேண்டும். இப்படி செய்தால், இன்னும் பல இணைய மோசடிகளை வருங்காலத்தில் மீம்களாக மாற்றி விடலாம்.

சைபர் சக்தி

சைபர் பாதுகாப்பிற்கும் தேவையான இணைய வழிமுறைகளை தெரிந்து கொண்டு பின்பற்றுவதற்காக பெண்களுக்கான இணைய பாடத்திட்டத்தை அளிக்கிறது மத்திய அரசின் சைபர் சக்தி இணையதளம்: https://isea.app/cybershakti/ சைபர் பாதுகாப்பு தொடர்பாக இளம் பெண்களுக்கு பயிற்சி அளிப்பதை நோக்கமாகக் கொண்ட இந்தத் திட்டம், சுவாரஸ்யமாக வடிவமைக் கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கட்டத்திலும் பரிசு புள்ளிகள் உண்டு. முடிவில் சான்றிதழும் வழங்கப்படும். ஆர்வம் உள்ள அனைத்து பெண்களும் பங்கேற்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. டிஜிட்டல் நிதி பாதுகாப்பு, இணைய பாதுகாப்பு, சைபர் ஒழுக்கம், ஆன்லைன் ஷாப்பிங் பாதுகாப்பு உள்ளிட்ட அம்சங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

இணைய பாதுகாப்பு

இணைய பாதுகாப்பிற்கான இன்னொரு பயனுள்ள தளம் : https://infosecawareness.in/concept/student/online-scams இணைய மோசடி வகைகள் தொடர்பான விரிவான தகவல்களை கொண்டிருப்பதோடு, இணைய பாதுகாப்பிற்கான வழிமுறைகளையும் விவரிக்கிறது. மாணவர்கள், பெண்கள், பெற்றோர்கள், மூத்த குடிமகன்கள் என தனித்தனி பகுதிகளும் இருக்கின்றன. டிஜிட்டல் மோகத்தில் இருந்து விடுபடுவதற்கான குறிப்புகளையும் காணலாம். இணைய பாதுகாப்பு விழிப்புணர்வுக்கு உதவும் தளம்.

–சைபர் சிம்மன்

சாசனம்



ஆசிரியர் குறிப்பு
கந்தர்வன்

கந்தர்வன், 1944இல் இராமநாதபுரம் மாவட்டம், சிக்கல் என்னும் கிராமத்தில் பிறந்தவர். நாகலிங்கம் என்பது இவரது இயற்பெயர். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் மாநிலப் பொறுப்பை வகித்தார். தொழிற்சங்கவாதி. பாமர மக்களின் வலிமிக்க வாழ்க்கையையும், களத்தில் கிடைத்த அனுபவங்களையும் சிறுகதை, கவிதை வழியே பதிவு செய்தவர். இவரது "சாசனம்" என்ற சிறுகதையை திரைப்படமாக்கினார் இயக்குநர் மகேந்திரன்.

ஓவியங்கள்:
துர்கா

அப்பா வெளியூருக்குப் போகையில் வண்டிக்குள் யார் பேச்சுக் கொடுத்தாலும், எவ்வளவு முக்கியமாக அது இருந்தாலும் தலையை வெளியே நீட்டி அந்தப் புளிய மரத்தை ஒரு தடவை பார்த்துக் கொள்வார். ஊர்க்கோடியில் குறவர் குடிசைகளுக்கு மத்தியில் பிரம்மாண்டமான மரம் அது. அடியில் பன்றி அடைந்து உரம் கொடுக்க ஊர் பூராவிலும் உள்ள மரங்களில் செழித்துக் கொழித்து நிற்கும் அது. அப்பாவுக்குச் சொந்தமான மரம்.

ஒரு செவ்வகவாக்கில் ஐந்து மைல் விஸ்தீரணத்தில் ஆறு சின்னக் கிராமங்களிலும் இந்தத் தாய்க் கிராமத்திலும் அப்பாவுக்கு நிலங்களுண்டு. அத்தனை நஞ்சை புஞ்சை வீடு மரங்களிலும் அப்பாவுக்கு ரொம்பப் பிடித்தமானது இந்த புளியமரம்தான். வெகு தூரத்திலிருந்து பார்த்தால் ஒரு குன்று பச்சையாய் நிற்பது போலிருக்கும். அருகில் வந்து அண்ணாந்து பார்த்தால் ஆயிரங்கிளையோடு அடர்ந்து அந்த மரத்திற்குள் ஒரு தோப்பு அசைந்தாடுவது போலிருக்கும்.

எண்ணெய் பூசியதுபோல் வழுவழு வென்றிருக்கும். சிமிண்டுத் திண்ணையில் பகல் பூராவும் அப்பா உட்கார்ந்திருப்பார். நாலு பண்ணையாள்களுக்கும் அஞ்சு கிராமத்துக் குத்தகைக்காரர்களுக்கும் உட்கார்ந்த இடத்திலிருந்தே உத்தரவுகள் போகும். எப்போதாவது பர்மாக் குடையை விரித்து நடப்பார். ஒரு நாளைக்கு இத்தனை தடவை என்று எண்ணிவிடலாம் இறங்கி நடப்பதை.

அப்பா நடந்திருக்க வேண்டிய நடையெல்லாம் தாத்தா நடந்திருந்தார். சமஸ்தானத்தில் தாத்தா இந்தப் பிரதேசத்தின் பேஷ்கார்.



மஹாராஜா இந்தப் பக்கமாய் ஒரு முறை திக் விஜயம் செய்தபோது தாத்தா ஒவ்வொரு வேளை விருந்தையும் ஒரு உற்சவமாய் நடத்தியிருக்கிறார். மஹாராஜாவின் நாக்கு அது வரை அறிந்திராத ருசியும் பண்டமும் விருந்துகளில். பரிவாரங்கள் தங்கள் வயிறுகளைத் தாங்கள் தூக்கிச் சுமக்க வேண்டிய நிலை.

மரியாதை காட்டி வெகுவாய்ப் பின்னால் வந்து கொண்டிருந்த தாத்தாவை அழைத்து விரலை அவ்வப்போது நீட்டிக் கொண்டே வந்தார் மஹாராஜா. பின்னால் அந்த நிலங்களெல்லாம் தாத்தாவுக்குச் சமானமாய் வந்தன.

தாத்தா அரண்மனைக்குப் போய் சாசனங்களையும் பட்டயங்களையும் வாங்கி வந்த நாளிலிருந்து எட்டு நாட்களுக்குள் இருபத்தோரு கிராமங்களில் ஆட்களைத் திரட்டினார். தங்களுடையதென்று எண்ணி உழுது கொண்டிருந்த குடியானவர்களை நிலங்களிலிருந்தும் ஊர்களிலிருந்தும் மஹாராஜாவின் சாசனங்களைக் காட்டி விரட்டினார். அடிதடிகளும் நாலு கொலைகளும் நடந்ததாகப் பேச்சுண்டு.

தாத்தா வீட்டிலிருந்து எப்போது புறப்பட்டுப் போனார். எந்த ஊரில் யாரு வீட்டிலிருக்கிறார், ராத்திரி எத்தனை மணிக்கு வருவார் என்பதெல்லாம் வீட்டில் யாருக்கும் தெரியாது. உள்ளூரில்தான் தங்கியிருக்கிறார் "ஒரு வீட்டில்" என்பது போல் நக்கலாக ஒருவர் சொல்ல "அதெல்லாமில்லை சிறைக்குளமோ பண்ணந்தையோ கீரந்தையோ எங்கேயிருக்காகனு யார் கண்டா" என்று அழுத்தமாய் அடுத்த ஆள் பேசிவிடும்.

சில சமயம் விடியற்காலைகளில் சிவந்த கண்களோடு வந்து சேர்வாராம். வந்ததும் பரபரவென்று வீட்டு ஆள்கள் ஒரு

தங்களுடையதென்று எண்ணி உழுது கொண்டிருந்த குடியானவர்களை நிலங்களிலிருந்தும் ஊர்களிலிருந்தும் மஹாராஜாவின் சாசனங்களைக் காட்டி விரட்டினார்.

அண்டா நிறையத் தண்ணீரைக் கொண்டு வந்து வாசலில் வைப்பார்கள். குளிரக் குளிரக் குளித்து வேட்டி துண்டை நனைத்துப் போட்டு விட்டு வீட்டிற்குள் நுழைவாராம்.

தாத்தா கையைப் பிடித்துக் கொண்டு அப்பா நடக்கையிலே மஹாராஜா இந்தியப் பிரஜையாகிவிட்டார். சாசனங்களையும் பட்டயங்களையும் அப்பா கையில் ஒப்படைத்துவிட்டுத் தாத்தா கிழக்குக் காட்டில் எரிந்தபோது முதல் தேர்தல் முடிந்து ஓட்டுகளை எண்ணிக் கொண்டிருந்த நேரம்.

கிராமங்களில் நீண்டு கிடந்த புஞ்சைகளை அப்பா அந்தந்த கிராமத்துக்குப் பெருங்குடியான வர்களிடம் வாரத்துக்கு விட்டு விட்டார். செவற்காட்டுப்பனைகளைப் பாட்டத்துக்கு விட்டார். தை மாசியில் வீட்டு மச்சிலும் குளுமைகளிலும் பட்டாசாலையிலும் நெல்லும் கம்பும் வரகும் கேப்பையும் ஒரு புறமாகவும், மிளகாய், கொத்தமல்லி, நிலக்கடலை, துவரம் பருப்பு, கருப்பட்டி வட்டுகள் என்று குவிந்து கிடக்கும். ஆள்பத்தி அறைக்குள் மட்டும் அப்பா யாரையும் அனுமதிக்க மாட்டார். அங்கிருக்கும் இரும்புப் பெட்டியை ஒவ்வொரு தடவையும் திறந்துமூடிவிட்டுத் திண்ணையில் உட்கார்கையில் அப்பா முகத்தில் வேர்வையும் அதிருப்தியும் தெரியும்.

ஆனால் ஒப்படைத்து விட்டுப் போன சாசனங்கள் பத்திரங்கள் எதிலும் ஏன் ஒரு சின்னத் துண்டு காகிதத்தில் கூட இந்த மரத்தைப் பற்றி ஒரு வார்த்தை இல்லை.

ஊர்க்கோடி புளியமரம் தளதள வென்று நிற்கிறது. அதிலிருந்துதான் வருசத்திற்குண்டான புளி வருகிறது. ஆனால் ஒப்படைத்து விட்டுப் போன சாசனங்கள் பத்திரங்கள் எதிலும் ஏன் ஒரு சின்னத் துண்டு காகிதத்தில் கூட இந்த மரத்தைப் பற்றி ஒரு வார்த்தை இல்லை.

ஒரு நாள் சுப்பையா மாமா அப்பா பக்கத்தில் வந்து உட்கார்ந்து பேச்சுவாக்கில் "மண்டபத்து மல்லி, மண்டபத்துப் புளி ரெண்டுக்கும் சமமா ஒலகத்திலே எங்கேயும் கிடையாது" என்று சொல்லிவிட்டார். அப்பா இதைக் கேட்டதும் அம்மாவைக் கூப்பிட்டார். "அந்தக் கொறட்டுப் புளியிலே கொஞ்சங் கொண்டாந்து மாப்பிள்ளட்ட குடு" என்று சொல்லிவிட்டு, "இன்னைக்குக் குழம்பு ஒங்க வீட்டிலெ இந்தப் புளியிலெ. விடிய வந்து சொல்லுங்க மாப்பிள்ளை, மண்டபத்துப் புளி ஒசத்தியா; கொறட்டுப் புளி ஒசத்தியானு"

மறுநாள் சுப்பையா மாமா திண்ணையில் வந்து உட்கார்ந்ததும் சொன்னார். "இந்தக் கொறட்டுப் புளிக்குச் சரியா மண்டபத்துப் புளியும் நிக்காது; மதுரைப் புளியும் நிக்காது!"

'கொறட்டுப் புளி' என்று அப்பா சொல்வது 'குறவீட்டுப்புளி' என்பதன் சுருக்கம். 'குறவீடு' என்று வருகிற எதையும் வேறு மாதிரித்தான் சொல்வார். அப்படிப் பேசி முடித்ததும் எதையோ மறைத்துத் தப்பித்து விட்ட திருப்தியில் பலர் முன்னிலையில் தன்னை மறந்து சந்தோஷப்பட்டுக் கொள்வார்.

ஆள்பத்தி அறையின் இரும்புப் பெட்டியைத் திறந்து சாசனங்களையும் பத்திரங்களையும் பார்த்து முடித்த சில சமயங்களில் அப்பா திண்ணையிலிருந்து இறங்கிக் குடையை விரித்தும் விரிக்காமலுமாய் ஓடப் போகிற மரத்தைக் கயிறு போட்டு வைக்கப் போவது போல் ஓடுவார். கொழுந்து விடும் நேரம், பூப் பூக்கும் நேரம், பிறை பிறையாய்ப் பிஞ்சு விடும் நேரங்களில் இப்படிப் போய் மரத்தடியில் நிற்பார்.

"அய்யா மகன் வந்திருக்கார் விலகுலெ" என்று சத்தம் போட்டு, வேடிக்கை பார்க்க வரும் குறவீட்டுப் பிள்ளைகளைச் சேரிக் கிழவர்கள் விரட்டுவார்கள். மரத்தடியில் அடைந்து கிடக்கும் பன்றிகளை விரட்டி



மேட்டுப்பக்கம் கொண்டு போவார்கள். பன்றிக் கழிவுகளைத் தள்ளி ஒரு புறமாய் ஒதுக்குவார்கள்.

மற்றக் குடிசைகளிலிருந்து விலகி ஒரு குடிசை மரத்திற்கு வடக்கில் தனியாய் உண்டு. வெளியில் உண்டாகும் சேரி அசுத்தங்கள் அந்தக் குடிசையருகே வந்துவிடாதவாறு சுற்றி ஒரு தீ வட்டம் நின்று காப்பதுபோல் பளிச்சென்றிருக்கும்.

அப்பாவின் குரலைக் கேட்டதும் குடிசைக்குள்ளிருந்து ஒரு கிழவி கண்ணில் பூ விழுந்து பார்வை தெரியாமல் கம்பூன்றி வெளியில் வருவாள். குறவர் கூட்டத்திலிருந்து விலகித் தனியாய் ஆகாயத்திலிருந்து வந்து பிறந்ததுபோல் கிழவியின் மகள் தாத்தா ஜாடையில் தாத்தா நிறத்தில் வந்து நிற்பாள். அப்பாவுக்கும் அந்தப் பொம்பிளைக்கும் பதினைஞ்சு வயசு வித்தியாசமிருக்கும்; சின்னவள்.

அந்தப் பொம்பிளையும் அவள் புருஷனும் பிள்ளைகளும் குறவர் கூட்டத்திலிருந்து விலகித் தனியாய் நிற்பார்கள். கிழவியும் மகளும் அப்பா பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் வாஞ்சையோடு கேட்பார்கள். அப்பா புறப்பட்டுப் போகும் போது அந்தப் பொம்பிளை அவர் பார்க்கும்படி முன்னே வந்து குப்பைக்கூளங்களைக் காலால் தள்ளி வழி செய்வாள். இவர்களின் இந்தச் செய்கைகளால் அப்பா தடுமாறி நடப்பார். வீடு வரும்போது மறுபடி முகம் மாறி வந்து சேர்வார்.

வெகுநேரம் யோசனையில் கிடப்பார். கணக்குப் பிள்ளையைக் கேட்டு விடலாமென்று அப்பாவுக்குப் பலமுறை தோன்றியதுண்டு. இந்த மரம் நிற்கும் நிலம் யாருக்குச் சொந்தம் என்று அவரிடம் கேட்கலாம். தன் பெயருக்கே ரசீது போடச் சொல்லலாம் வரி கட்டியதாக. ஆனால் மரம் இருக்கும் இடம் நம் பெயரிலில்லை

என்று கணக்குப்பிள்ளைக்கு நாமே சொல்லிக் கொடுத்தது போலாகிவிடும். சொத்து விஷயத்தில் அவசரப்படக்கூடாது. போகிற வரை போக வேண்டும். அப்பா, கணக்குப் பிள்ளைக்குச் சொல்லி விடும் ஞாபகம் வந்து ஒவ்வொரு முறையும் நிறுத்தி வைத்தது போக அந்த எண்ணத்தையே சில நாளில் மறந்து விட்டார்.

வருசா வருசம் புளியம்பழ உலுக்கல் அப்பா முன்னால் விமரிசையாய் நடக்கிறது. மூடை மூடையாய்ப் புளி வீட்டுப் பட்டாளத்துக்கு வருசத்து. புளியம்பழ உலுக்கலுக்கு முதல் நாளே அப்பா ஆள் சொல்லி விடுவார். மறுநாள் காலை அப்பா போகுமுன்னால் பன்றிக் கழிவுகளைக் கூட்டிப் பொட்டலாக்கி வைத்திருப்பார்கள்.

அப்பா பத்து ஆள்களோடும் ஒரு கட்டுச் சாக்குகளோடும் வெயில் வந்ததும் வருவார். வருசா வருசம் இது ஒரு சடங்கு போல் நடக்கும். உலுக்கலுக்கு முன் கிழவியின் மகள் கிழவியின் கையைப் பிடித்துக் கொண்டு வந்து மரத்தருகில் நிறுத்துவாள். கிழவி மரத்தைத் தொடுவாள்; தடவுவாள்; கும்பிடுவாள். குருட்டுக்

> "இனிமேற்பட்டு இந்த மரத்தை நாந்தான் உலுக்குவேன்."
> "இதிலே எனக்குப் பாத்தியதை உண்டு..." என்று பேசத் துவங்கியது. அப்பாவுக்குக் கால் நடுங்கியது; உதடு கோணியது.

கண்ணிலிருந்து தாரை தாரையாய்க் கண்ணீர் வடியும். மகள் மெல்லக் கிழவியை அகற்றி அழைத்துக் கொண்டு குடிசைப் பக்கம் போவாள்.

அப்பா இவைகளையெல்லாம் பார்த்தும் பார்க்காதது போல் நிற்பார். சீக்கிரமாய் இந்தச் சடங்கு நடந்து முடியவேண்டுமென்பது போல் பொறுமை இழப்பார். இது முடிந்ததும் பலசாலிகளாயுள்ள எட்டு பேர் திசைக்கு ஒருவராய் ஒரே நேரத்தில் கிளைகளில் ஏறி மேற்கொப்பைப் பிடித்துக் கொண்டு கூத்தாடுவார்கள்.

பழங்கள் உதிர்ந்து சடசடவென்று சத்தங்கிளப்பும். குற வீடுகளின் சின்னப்பிள்ளை எதுவும் பழம் பொறுக்க நடுவில் நுழைந்தால் மண்டையிலடிக்கும். ஒரு பழமே ரத்தம் கசிய வைத்துவிடும்.

மொத்தக் கிளைகளையும் உலுக்கியபின் அப்பா மரத்தைச் சுற்றி வந்து மேல் நோக்கிப் பார்வையிடுவார். ஒரு கிளை விட்டுப் போயிருந்தாலும் அவர் பார்வைக்குப் பட்டுவிடும். எல்லாமும் உலுப்பி முடிந்தவுடன் பத்துப் பேரும் பழங்களை வாரிக் கட்டுவார்கள்.

ஒரு சின்னக் குவியலை அப்பா காலாலேயே குவித்து ஒதுக்குவார். அந்தப் பொம்பிளை வந்து அள்ளிக் கொள்ளும். அள்ளும்போது அவள் கண்ணில் இருந்து கண்ணீர் வடியும். மூடைகளை வண்டியிலேற்றி வீட்டில் கொண்டு வந்து

இறக்குவார்கள். ஒரு வாரம் முற்றத்தில் காயும். அப்புறம் பதினைந்து பேர்கள் பட்டாசாலையில் உட்கார்ந்து உடைப்பார்கள். மறுபடியும் முற்றத்துக்குப் போகும். அப்புறம் சால்களில் அடையும்.

ஒரு வருசம் உலுக்கலில் போது கிழவி மரத்தைத் தொட்டு அழுது கொண்டிருந்தபோது மகள் புருசன், "ஒங்க ஆத்தாளை இங்கிட்டுக் கூப்பிடு. அசிங்கமாயிருக்கு; சனம் பூராவும் வேடிக்கை பார்க்குது" என்று கோபமாய்ச் சொன்னான். அந்த பொம்பிளை தயங்கியது. "கூட்டிட்டு வரப்போறியா இல்லையாடி" என்று எல்லோருமிருக்கக் காலால் ஒரு உதை விட்டான். ஓடிப்போய்க் கிழவியை இழுத்துக் கொண்டு வந்தாள். அன்று அப்பா காலால் தள்ளிக் குவித்திருந்த புளிக்கு முன்னால் வந்து அவன் "இதையும் அள்ளிக்கிட்டுப் போயிருங்க" என்றான்.

அவன் கை காலெல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தன. அப்பா சற்றுக் கலங்கிப் போனார். விட்டுக் கொடுக்காமல் "இதையும் அள்ளிக் கட்டுங்கடா" என்று சொல்லிவிட்டு நடந்தார். அன்று ஒரு பழம் விடாமல் வீட்டுக்கு வந்து சேர்ந்தன. அடுத்த வருசம் வழக்கம் போல் மறுநாள் புளியம்பழம் உலுக்க வரப் போவதாகச் சொல்லியனுப்பியிருந்தார் அப்பா. மறுநாள் பத்துப் பேரோடு மரத்தடிக்குப் போகையில் தரையெங்கும் பன்றிக் கழிவுகள் எங்கும் அசிங்கமும் நாற்றமும்.

கயிற்றுக் கட்டிலில் கிழவி உட்கார்ந்திருந்தாள். யாரோ வம்பாய் உட்கார்த்தி வைத்திருப்பது போலிருந்தது. அந்தப் பொம்பிளை புருஷனோடும் பிள்ளைகளோடும் நின்றாள். அப்பா அந்தப் பெண்ணைக் கடுமையாகப் பார்த்தார். "என்ன இதெல்லாம்?" என்று அதட்டினார். சொல்லி வைத்ததுபோல் யாரும் வேலை வெட்டிக்குப் போகாமல் குறவீட்டு ஆள்கள் மொத்தமும் கூடியிருந்தது.

அந்த பொம்பிளை "இனிமேற்பட்டு இந்த மரத்தை நாந்தான் உலுக்குவேன்." "இதிலே எனக்குப் பாத்தியதை உண்டு..." என்று பேசத் துவங்கியது. அப்பாவுக்குக் கால் நடுங்கியது; உதடு கோணியது. "போதும் போதும் பேச்சை நிறுத்து" என்று அதற்கும் அப்பால் அந்தப் பொம்பிளை பேசப்போவதைப் பதறிப்போய் நிறுத்தினார். கயிற்றுக் கட்டிலின் மேல் அந்தக் கிழவி நிச்சலனமாய் உட்கார்ந்து இருந்தாள்.

கூட்டி வந்த ஆள்களைத் திருப்பியழைத்துக் கொண்டு தலையைச் சாய்த்துக் குனிந்து நடந்து வீடு வந்து சேர்ந்தார். அதற்கப்புறம் அப்பா ஆள்பத்தி அறைக்குள் நுழைந்து பெட்டியைத் திறந்து சாசனம் எதையும் எடுத்துப் பார்க்கவே இல்லை.

சுய உதவிக் குழுக்களின்
செயல்பாடுகளை அறிந்திட
முற்றம் படியுங்கள்!

முற்றம் மேலும் மேலும்
வளர்ந்திட உங்களின்
ஆதரவை தாருங்கள்!

முற்றத்திற்கு சந்தா
செலுத்திடுங்கள்!

புத்தகத்தைப் படிக்க என்னை
Scan செய்யவும்

முற்றம் இதழின் சந்தா விபரம்	
ஒரு ஆண்டு	ரூ. 240/-
இரண்டு ஆண்டு	ரூ. 450/-
மூன்று ஆண்டு	ரூ. 680/-

விளம்பரக் கட்டணம்	
அட்டையின் 2-வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் 3-வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000/-
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000/-

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

சந்தாதாரர்களே நேரடியாக முற்றம் https://mutram.org.in/Login.aspx என்ற இணையதள முகவரி அல்லது https://play.google.com/store/apps/details?id=com.isky.mutram_magazine என்ற கைபேசி செயலியில் தங்களது முகவரியினைப் பூர்த்தி செய்தல் மற்றும் பணப்பரிமாற்றம் போன்ற பணிகளை செய்து கொள்ளலாம்.

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி

முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,

அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

முற்றம் இதழில் உங்களுடைய படைப்புகளான, கவிதை, கட்டுரை, ஓவியம், சிறுகதை மற்றும் 'வாழ்ந்துக் காட்டுவோம்' பகுதியில் உங்கள் குழுவின் சாதனைக் கதை இடம் பெற உரிய புகைப்படங்களுடன் கீழ்காணும் மின்னஞ்சல், முகவரி வழியே எங்களை அணுகுங்கள். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் :
wdcmutram@gmail.com

கௌரவ ஆசிரியர்
ஆர். வி. ஷஜீவனா, இ.ஆ.ப.

சிறப்பு ஆலோசகர்
ஐயன் கார்த்திகேயன், பி.டெக்.,

பதிப்பாளர், ஆசிரியர்
எஸ். சின்னப்பன்

மேலாளர்
வா. ராகுலன், PRO

துணை ஆசிரியர்
ஏ. கண்ணன்

பிழை திருத்துபவர்
எஸ்.எஸ். ரவிச்சந்திரன்

வடிவமைப்பு
என்.எஸ். நாணா

புத்தக மேம்பாடு
Aarah Digitainments

ஊரக வளர்ச்சி
மற்றும்
ஊராட்சித்துறை
மலர்: 27
இதழ்: 04
ஆகஸ்ட் 2025

கவிதை

– தி பரமேசுவரி

ஓவியம்: துர்கா

இரவின் விளிம்பில்

எனக்காக ஒரு கவிதை என்கிறாய்
கனமானதொரு மழைத்துளி விழுகிறது
எனக்காக ஒரு கவிதை என்கிறாய்
எங்கோ ஒரு பறவை இசைத்துப் பறக்கிறது
எனக்காக ஒரு கவிதை என்கிறாய்
நிழல் பரப்பும் பெருமரங்கள் சற்றே அசைகிறது
எனக்காக ஒரு கவிதை என்கிறாய்
தாவும் அணிலொன்று நின்று பார்க்கிறது
எனக்காக ஒரு கவிதை என்கிறாய்
தண்ணொளிர் நிலவு உற்று நோக்குகிறது
எனக்காக ஒரு கவிதை என்கிறாய்
உற்றுநோக்குமிந்தக் கண்களின் சோகம்
மூடா இமைகளுக்குள் புரளும் கனவு
தீக்கொழுந்தாய்ப் படரும் தேகம்
கொல்லும் தனிமை
புரண்டு புரண்டழும் நினைவின் புழுதி
கடக்காது நிற்குமிந்த இரவின் விளிம்பு
வெறுமையின் சரிதல்
எல்லாம்
எல்லாம் திரட்டி எழுதுகிறேன்
உனக்காக ஒரு கவிதை.

ரேபிஸ் நோய்

பயம் வேண்டாம்! பாதுகாப்பு வேண்டும்!

இந்தியாவில் பரவலாக வெறிநாய் கடித்த செய்திகளை காண முடிகிறது. 2024 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை, சுமார் 37 லட்சம் பேரை வெறிநாய்கள் தாக்கியுள்ளன. அதில், 50க்கும் மேற்பட்டோர் ரேபிஸ் நோயால் உயிரிழந்துள்ளதாக தேசிய நோய் தடுப்பு மையம் தெரிவிக்கிறது. இந்நிலையில், ரேபிஸ் நோய் மற்றும் அதன் தற்காப்பு பற்றி சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த பொது நல மருத்துவர் அ.ப.ஃபரூக் அப்துல்லா அவர்களை நேர்காணல் எடுத்தோம். முற்றம் இதழுக்காக அவர் அளித்த பேட்டி இதோ,

ரேபிஸ் நோய் என்றால் என்ன? இது எப்படி பரவுகிறது?

ரேபிஸ் என்பது வெறிநாய்க்கடி நோய் என்றும் அழைக்கப்படுகிறது. இது ரேபிஸ் வைரஸினால் ஏற்படும் தொற்று நோயாகும். பலரும் நினைப்பது போன்று இந்த வைரஸ் நாய்களிடம் இருந்து மட்டும் பரவுவதில்லை. நாய்கள், பூனைகள், கிரிப்பிள்ளை, வௌவால்கள் போன பல விலங்குகளை இந்த வைரஸ் தாக்கும்போது, அவற்றின் உமிழ்நீர் சுரப்பிகளில் தங்கிவிடுகிறது. தொற்றுக்குள்ளான விலங்குகள் மனிதர்களைக் கடித்தாலோ அல்லது கீறினாலோ, இந்த வைரஸ் மனிதர்களுக்கும் பரவுகிறது. ரேபிஸ் நோய் முழுமையான மரணத்தை ஏற்படுத்தும் மிகவும் ஆபத்தான நோயாகும்.

இந்த விலங்குகளின் உமிழ்நீர் பட்டாலே ரேபிஸ் பரவுமா?

உமிழ்நீர் படுவதால் மட்டுமே ரேபிஸ் நோய் வருவதில்லை. அதில் 3 வகைகள் உள்ளன.

வகை ஒன்று (Category I):

விலங்கைத் தொடுதல்

விலங்குக்கு உணவு கொடுத்தல்

காயமில்லாத ஆரோக்கியமான தோலில் விலங்கு நக்குதல்

காயமில்லாத ஆரோக்கியமான தோலில் விலங்கின் எச்சில், சிறுநீர் போன்றவை படுதல்

சிகிச்சை: இதனால் ரேபிஸ் பரவுவதில்லை. எனவே எந்த சிகிச்சையும் தேவையில்லை.

வகை இரண்டு (Category II):

இரத்தம் வராத அளவிலான லேசான கீறல்கள்

பல் பதியாத அளவிலான சிறிய கடிகள்

சிகிச்சை: கடிபட்ட இடத்தை நன்கு கழுவுதல் + ரேபிஸ் தடுப்பூசி எடுத்துக்கொள்ளுதல்

வகை மூன்று (Category III):

ஒன்று அல்லது பல இடங்களில் இரத்தம் வரும் அளவில் முழுமையான கடி/கீறல்

காயம் ஏற்பட்ட இடத்தில் விலங்கு நக்குதல்

கண், வாய் போன்ற இடங்களில் விலங்கின் எச்சில் படுதல்

சிகிச்சை: கடிபட்ட இடத்தைக் கழுவுதல் + ரேபிஸ் தடுப்பூசி + கடிபட்ட இடத்தில் ரேபிஸ் இம்யூனோகுளோபுளின் ஊசி (கட்டாயம்)

ரேபிஸ் நோய் ஏற்பட்டுவிட்டால் மரணம் நிச்சயம் என்பது 100% உண்மை.

Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by B. RAJKUMAR, RASI GRAPHICS PRIVATE LTD, 40.Peters Road, Royapettah, Chennai - 600014. Published from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor: S. CHINNAPPAN.

இதற்கான காரணம்: இந்த வைரஸ் மூளையை அடைந்த பின்னரே மூளைத் தொற்று அறிகுறிகள் தென்படும். வைரஸ் மூளையை அடைந்துவிட்ட பிறகு எந்தவித சிகிச்சையும் பயனற்றதாகிவிடுகிறது.

ஆதலால், கண்டிப்பாக தொடக்கக்கூடாது. மேலும், சாதாரண காயங்களுக்கு பொதுவாக பயன்படுத்தும், மண், காபித் தூள், எலுமிச்சை, மூலிகைகள், வெற்றிலை போன்றவற்றை கடிபட்ட இடத்தில பயன்படுத்துவது தவறு.

ரேபிஸ் நோய் முக்கிய அறிகுறிகள்:

- காய்ச்சல்
- கடுமையான தலைவலி
- நீரைக் கண்டு பயம் (ஹைட்ரோஃபோபியா)
- ஒலியைக் கேட்டு பயம் (ஃபோனோஃபோபியா)
- காற்று படுவதாலும் கடும் உடல்வலி
- சிறிதளவு நீர் தொண்டையில் பட்டாலும் தசைகள் இறுக்கம், மூச்சுத் திணறல்
- அதிக எச்சில் சுரத்தல்
- தசை இறுக்கம்
- பின்னர் பக்கவாதம், மனம் பிதற்றுதல் போன்ற நிலைகளுக்குச் சென்று இறுதியில் மரணம்

மரு. ஃபரூக் அப்துல்லா

நாய் கடித்தால் முதலில் என்ன செய்ய வேண்டும்?

வீட்டில் வளர்க்கப்படும் பூனையோ, நாயோ அல்லது தெரு நாயோ, எதுவாக இருந்தாலும், கடி பட்ட உடனே, காயம் பட்ட இடத்தை நன்கு குழாய் நீரில் சுத்தம் செய்ய வேண்டும். சோப் அல்லது போவிடோன் அயோடின் போன்ற கிருமி நாசினியை பயன்படுத்தலாம். குறைந்தது 15 நிமிடங்களாவது, ஓடும் நீரில் கழுவ வேண்டும். பிறகு உடனே மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும். கடிபட்ட இடத்தில் ரத்தம் வந்தால், அதையும் கண்டிப்பாக மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டும்.

நாய் கடித்தால் என்ன செய்யக்கூடாது?

பயமோ பதட்டமோ படாமல் முதலில் கடிபட்ட இடத்தை கழுவ வேண்டும். எந்த காரணத்தினாலும், கடிபட்ட இடத்தை தொடக்கூடாது. கடிபட்ட இடத்தில் வைரஸ் இருக்கும்,

நாய்கடித்ததால் தடுப்பூசி போடும்பொழுது, அசைவம் சாப்பிடலாமா?

தாராளமாக சாப்பிடலாம். தடுப்பூசிக்கும் அசைவம் சாப்பிடுவதற்கும் எந்த தொடர்பும் இல்லை. இது வெறும் மூட நம்பிக்கையாகும்.

நாய்க்கடிக்கு எப்போது மருத்துவரை பார்க்க வேண்டும்?

உடனடியாகத்தான். தாமதப்படுத்துதல் கூடாது. நாய்க்கடி அல்லது பூனைக்கடி ஏற்பட்டால் அதை அலட்சியமாக நினைக்காமல், உடனடியாக உயிர்காப்பு சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டும்:

காயமடைந்த இடத்தை நன்றாக கழுவி சுத்தப்படுத்த வேண்டும். ரேபிஸ் தடுப்பூசிகளை சரியான முறையில் எடுத்துக்கொள்ள வேண்டும். அவசியமான சூழ்நிலைகளில் ரேபிஸ் இம்யூனோகுளோபுளின் ஊசியைப் போட்டுக்கொள்ள வேண்டும்.

இந்த மூன்று முக்கியமான நடவடிக்கைகளும் ரேபிஸ் தொற்றைத் தடுக்க உதவும். மலையேற்றம் போன்ற இடங்களுக்கு செல்லும் போது, குறிப்பாக காடுகள் மற்றும் மலைப்பகுதிகளில் வாழும் காட்டு விலங்குகளால் கடிபட்டால் ரேபிஸ் தொற்று ஏற்படுவதற்கான ஆபத்து மிக அதிகம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். உடனடி மருத்துவரின் ஆலோசனையைப் பெறுவதே சிறந்தது.

– க. ஸ்ரீநிதி

Posted at Egmore RMS, Patrika Channel.
RNI NO .TNTAM/1999/02733 - TAMIL NADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS.1569/2023
Reg. No. TN/CH/(C)/455/2024-2026 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564/2024-2026
Date of Publication : 1st Week of the every month Posted between 8th-14th August 2025